விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 22 சனிக்கிழமை (06.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# வடக்குத் தேர்தலை நடத்த உத்தரவிட்டார் ஜனாதிபதி

## விரைவில் தேர்தல் திகதி அறிவிப்பு

வட மாகாண சபைத் தேர்தலை நடத்தும்படி தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான உத்தியோகபூர்வ உத்தரவை நேற்று வழங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வட மாகாண சபையை உருவாக்கும் உத்தரவிலும் கையெழுத்திட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை மாணவர் படுகொலை

## 7 வருடங்களின் பின்னர் 12 அதிரடிப் படையினர் கைது

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சிறப்பு அதிரடிப்படையைச சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில், அக்காலப் பகுதியில் திருகோணமலை பகுதியில் பொலிஸ் பரிசோதகராக இருந்து, தற்போது உதவி அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ள அதிகாரியும் ஒருவராவர்.

இந்நிலையில் திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட இவர்களை நீதிபதி யூ.எல்.எம். அஸ்கர் எதிர்வரும் 18ஆம் திகதிவரை அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டில் திருகோணமலை கடற்கரையில் அமைக்கப் (19ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்கள் விபத்து; 8 பேர் காயம்

பயணிகளுடன் சென்று கொண்டிருந்த இரண்டு பேருந்துகள் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் 8 பேர் படுகாயமடைந்ததோடு சுமார் 20 இற்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கோர விபத்துச் சம்பவம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் புங்கன்குளம் சந்தியில் ஏ -9 பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
(19ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வை அமுல்படுத்த வேண்டும் இந்தியா கோரிக்கை

இலங்கையில் அதிகாரப்பகிர்வு முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது. அதிகாரப் பகிர்வு குறித்த அரசியல் சாசன ஏற்பாடுகள் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பலவீனப்படுத்தப்படக் கூடாது எனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இதனைத் தெரிவித்துள்ளார்.

13-ம் திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்திய அரசாங்கம் (02ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டிக்கு சென்ற பொதுமக்களை இராணுவம் திருப்பி அனுப்பியது!

### நீண்ட நேரம் காத்திருந்த மக்களுக்கு ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியில் உள்ள ஆலயத்துக்குச் செலல படையினர் அனுமதி மறுத்துள்ளனர். இதனால் அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியில் உள்ள ஆலயங்களில் பொதுமக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட ஜனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சும் அனுமதி வழங்கியிருந்தபோதும் 200 பேரை மட்டுமே உள்ளே செல்ல இராணுவத்தினர் அனுமதி (19ஆம் பக்கம் பார்க்க)



## எதிர்பார்த்த எந்த விடயங்களும் வடக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை

### சரத் பொன்சேகா யாழில் உரை

வடக்கு மக்கள் யுத்தத்திற்கு பின்னர் எதிர்பார்த்த எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்த இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா,

இராணுவத்தினர் உட்பட ஏனைய படைப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் தற்போது தவறானவர்களினால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் எனவும் யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நோக்கத்தோடு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த சரத் பொன்சேகா, யாழ். ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள இராணுவத்தினர உட்பட ஏனைய படைப்பிரிவினைச் சேர்ந்தவர்கள் தற்போது தவறானவர்களினால் வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஹோட்டல் (19ஆம் பக்கம் பார்க்க)



கௌரவ நாமல் ராஜபக்ஷ.. அவர்கட்கு நன்றிகள்

யாழ் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் 02.06.2013 அன்று
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க மாநாட்டில்
யாழ் மாவட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டதாரிகளினால் தமது நியமனம் தொடர்பாக
கௌரவ பா. உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அவர்களிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை அவர் ஏற்றுக் கொண்டு அதற்கு துரித கதியில்
நியமனங்களைப் பெறுவதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டமைக்கு யாழ் மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலும், உயர்
தேசிய கணக்கியல் டிப்ளோமாதாரிகள் சார்பிலும் கௌரவ பா. உ. நாமல் ராஜபக்ஷ அவர்களிற்கு
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. அங்கஜன் இராமநாதன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர், யாழ் மாவட்டம்.

(3192)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் ஆடித் தள்ளுபடி

இன்று தொடக்கம் வீட்டுக்குத் தேவையான அனைத்து தளபாடப் பொருட்களையும் ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.



0778314201
0773583879

இணுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில் யாழ்ப்பாணம். (C-3872)



## வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு

தொ.பே. : 021 321 0815
E-mail : valampurii@yahoo.com, valampuriijaffna@gmail.com



## பாலா சினிமா சாவகச்சேரி

06.07.2013 முதல்

காட்சிகள் 10.30 2.30 6.30



(C-3867)



## WICKramarachchi Opticians





யாழ்.விக்கிரமாராட்சி அன் கம்பனியில் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி-வரை இலவசமாக காது , கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் செவிப்புலன் அற்றோர் மற்றும் கண்பார்வையற்றோர் உங்கள் பரிசோதனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் மூக்குக் கண்ணாடிகளுக்கும் 25% - 50% வரை விலைக்கழிவும் வழங்கப்படும். எனவே நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம் யாழ்.விக்கிரமாராட்சி அன் கம்பனி உடன் தொடர்புகொள்ளுங்கள்

### J.M.விக்கிரமாராட்சி அன் கம்பனி

229, 231 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9288

ISO :9001:2008

(சி-3791)


## அதிகாரப்...

இலங்கைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குறிப்பாக இந்தியா பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள்

## கருத்தரங்கு

### பொருளியல்

### S.வரதராஜன்

| | |
|---|---|
| வணிக முதற் தேர்வு | July 12,13,14 |
| வணிக இரண்டாம் தேர்வு part-I | July 19,20,21,22 |
| வணிக மூன்றாம் தேர்வு part-II | July 26,27,28 |
| வணிகமாணி பகுதி-III | Aug 2,3,4,5 |

அச்சடிக்கப்பட்ட விளக்க- வினா விடைக் குறிப்புக்கள் வழங்கப்படும்

*10-07-13க்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்பவர்கள் மட்டுமே கருத்தரங்கிற்கு அனுமதிக்கப்படுவர்
*பதிவுக்கட்டணம் 1000ரூபா
*மேலதிக விபரங்களுக்கு 0778607216 என்ற தொலைபேசி எண்ணுடன் அல்லது அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொள்ளலாம். (c-3898)

வணிக முகாமைத்துவப் பட்டப்படிப்புகள் கல்லூரி
D.C.M Degree College of Commerce and Management Studies
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்) யாழ்நகர்



## வீடு விற்பனைக்கு

விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள மூன்று பரப்பு காணியும் புது வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-இ.பாலேந்திரன்
0776153847 (C-3899)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCIES

*Applications are invited by me up to 06.07.2013 from suitably qualified persons for the following posts:*

***1. VISITING ASSISTANT UNIVERSITY MEDICAL OFFICER (ON ASSIGNMENT)***

*Qualification:*

*Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner*

*Rate of payment per hour:- Rs.275.00*

*The selected officers should be prepared to work in the **Siddha Medicine Unit, Kaithady and Ramanathan Academy of Fine Arts, Marathrmadam** of this University.*

*Retired officers' may also apply.*

***2. ELECTRICIAN (ON ASSGIMENT)***

*A candidate who possesses the following qualifications may apply:*

*i. Pass in the 8th standard.*

*ii. Should be conversant with*

*a)Detecting faults, repairs and assembly of materials, transformers and all types of machinery and appliances, cables, wires and their ratings, measuring instrument and their uses various types of wiring, joining, testing meters and small transformers:*

*b) Reading and understanding drawings, and diagrams, Reading scales and record fractional dimensions;*

*c) Care and the use of the tools in the trade.*

*iii. Not less than 2 years' experience as an electrician in a government department, state Cor poration or in a recognized establishment.*

*Rate of payment per day Rs.795.00 fixed.*

*Applications should be sent with full bio-data. The envelope containing the application and the bio-data must bear the name of the post which they apply on its top left corner and either hand-delivered or sent under registered post to reach the office the senior Assistant Registrar/Establishments Branch [Non – Academy] on or before 29.07.2013.*

**REGISTRAR**
**University of Jaffna.**
**05.07.2013**

(C-3900)


## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.
சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829 (C-3874)



நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை
பழைய மாணவர் சங்கம், கைதடி
46வது ஆண்டு நிறைவு விழாவும்
வருடாந்தப் பொதுக் கூட்டமும் 2013

தலைவர்:கெ.பிரகாஸ்
காலம்: 07.07.2013
நேரம்: 10.00மணி
இடம்: நவீலட் பாடசாலை மண்டபம்

### பிரதம விருந்தினர்

கௌரவ திரு.சிலவேஸ்ரி அலன்ரின் (A.S.உதயன்)
(பாராளுமன்ற உறுப்பினர்)

### சிறப்பு விருந்தினர்

திரு.சுந்தரம் அருமைநாயகம்
அரச அதிபர், யாழ்ப்பாணம்
திரு.க.கமலேந்திரன்(கமல்)
அமைப்பாளர் யாழ் மாவட்டம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
திரு.அ.இரவீந்திரதாசன்(J.P)
நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர், நல்லூர் பிரதேச எதிர்கட்சி தலைவர்
கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,
தலைவர் சிவபூமி பாடசாலை, கோண்டாவில்
திரு.திருமதி.மதுமதி வசந்தகுமார்
பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுசங்கம், வடமாகாணம்
திரு.V.S.மகேந்திரன்
அதிபர் நவீல்ட் பாடசாலை, கைதடி
திரு.ச.புவனேஸ்வரன்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர்

தலைவர் கெ.பிரகாஸ் செயலாளர் தெ.அனுரா

கங்கா போட்டோ & வீடியோ
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

(3189)



sale sale sale sale



Office Wear
Silk and Cotton Sarees (with Blouse) 500/-
ஆடித் தள்ளுபடி

Saravana Tex

## சரவணா ரெக்ஸ்

01, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.



(சி-3902)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## தாய்ப்பாசம்

நீண்டகாலத்திற்கு முன்னர் நடந்த உண்மை நிகழ்ச்சி இது.

அவர் ஒரு நீதிபதி. சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி.

ஒருநாள் மாலை... வேலைமுடிந்து வீட்டுக்கு வராமல் நண்பர்களுடன் சேர்ந்து பொழுது போக்கினார்.

இரவு மிகவும் நேரம் சென்ற பின்னர் வீடு திரும்பினார்.

வீட்டில் வயதான தாயார் இவரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தார்.

மகன் இன்னும் வந்து சேரவில்லை என்ற கவலை அவருக்கு. நீண்டநேரம் சென்றபின் மகன் வீட்டுக்கு வந்து மெதுவாகப் படியேறினார்.

தாயார் என்ன செய்தார் தெரியுமா?

பளாரென்று ஓங்கி மகனுடைய கன்னத்தில் அறைந்தார்.

ஏன் இவ்வளவுநேரம்? என்று கேட்டுக்கொண்டே அறைந்தார்.

மகனுடைய கண்களில் கண்ணீர்!

வயதான படித்த நீதிபதியொருவர் கன்னத்தில் அறை வாங்குவது எவ்வளவு அவமானம்!

அதற்காகத்தான் அழுதாரா?

அப்படி இல்லையாம்!

அவர் என்ன சொன்னார் தெரியுமா?

"நான் இப்படிஅடிக்கடிஎன்அம்மாவிடம்அடிவாங்குவேன்.

அப்பொழுது எல்லாம் அடி பலமாகவிழும்.

இன்றைக்கு அம்மா அடித்தார். வலிக்கவேயில்லை.

அம்மாவுக்கு பலம் குறைந்து விட்டதே... வயதாகி விட்டதே... என்பதை நினைக்க அழுகை வந்துவிட்டது அழுதேன்'' என்றாராம்.

எப்படி இருக்கிறது பாருங்கள் தாய்ப்பாசம். இந்த உண்மை நிகழ்ச்சியை காகா கலேல்கர் என்பவர் மகாத்மா காந்தியிடம் சொன்னாராம்.

இன்னொரு நிகழ்ச்சி. அம்மாவுக்குத்தாகம் ஏற்பட்டு விட்டது.மகனிடம் குடிக்கத் தண்ணீர் கொண்டுவரும்படி சொன்னார்.

சொல்லிவிட்டுத் தூங்கிவிட்டார். மகனும் ஓடிப்போய் ஒரு குவளையில் தண்ணீரை எடுத்துக்கொண்டு வந்தார்.

அம்மா தூங்கிக் கொண்டிருந்தார்.

எழுப்பினால் தூக்கம் கலைந்துவிடுமோ என்று நினைத்து விழிக்கும் மட்டும் கையில் தண்ணீர்க்குவளையுடன் அங்கே நின்று கொண்டிருந்தாராம்.

நீண்டநேரம் ஆகிவிட்டது. திடீரென்று ஒரு கட்டத்தில் அந்த அம்மா விழித்துப் பார்க்கிறார்.மகன் எதிரே நின்று கொண்டிருந்தார்.

''மகனே! இவ்வளவு நேரமும் இங்கேயா நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று எழுந்து மகனைக் கட்டியணைத்தார்.

தலையில் கையை வைத்து வாழ்த்தினார்.

என் மகன் பெரிய அறிஞராக வரவேண்டும் என்று வாழ்த்தினார். அந்த வேண்டுதல் வீண் போகவில்லை.

அந்த மகன் வளர்ந்து பேரறிஞரானார்.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்.

வாழ்நாள் முழுவதும் உழைத்தார். மனிதர்களை நல்லவர்களாக்கப் பாடுபட்டார். அவர்தான் ஷர்புதீன் எஹ்யா.

பெரியவர்கள் எல்லோரும் தம் தாயாரை எப்படி மதித்தார்கள் என்பதை இந்த நிகழ்ச்சிகளில் இருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டும். எவ்வளவு வயதானாலும் தாய்க்குப் பிள்ளைதானே.

ஒருதாய் தன் மகனைப் படுக்கையிலிருந்து எழுப்பினார்.

"மகனே! எழுந்திரு கல்லூரிக்கு நேரமாச்சு"

"எனக்கு காலேஜுக்குப் போகவே பிடிக்கலேம்மா"

" ஏன் பிடிக்கவில்லை? அதற்கு இரண்டு காரணம் சொல்லு"

"முதல் காரணம் அங்கேயிருக்கிற ஆசிரியர்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. இரண்டாவது காரணம் மாணவர்களுக்கும் என்னைப் பிடிக்கவில்லை"

"அதற்காகக் கல்லூரிக்குப் போகாமல் இருக்கக் கூடாது" எழுந்திரு."நான் எதற்காகப் போகவேண்டும்; அதற்கு நீ இரண்டு காரணம் சொல்" தாய் சொன்னார்.

"முதல் காரணம் உனக்கு வயது 52. இரண்டாவது காரணம் நீதான் பிறின்சிப்பல்"

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# எனது மகனை மீட்டுத்தாருங்கள்; கண்ணீர் மல்க கதறிய தாய்

வடக்கிலுள்ள நாம் வாழ்வு வெறுத்துத்தான் வாழ்ந்து வருகிறோம் என இரு பிள்ளைகளை இளம் வயதில் பறிகொடுத்த தாய் ஒருவர் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவிடம் கூறி கதறியழுதார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா இராமநாதன் வீதியிலுள்ள மிலேனியம் விடுதியில் நேற்றுக்காலை மக்கள் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார்.

இதன்போதே குறித்த தாய் தனது பிள்ளையை மீட்டுத்தருமாறு கதறியழுதார்.

குறித்ததாய் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரியைச் சேர்ந்த நான் கடந்த 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8 ஆம்திகதி எனது முதலாவது மகனை 16 வயதில் என் கண்முன்னாலேயே இனந்தெரியாத நபர்கள் வீட்டினுள் நுழைந்து சுட்டனர்.

2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் 14 ஆம் திகதி வெளியே சென்றிருந்த என் இரண்டாவது மகன் மீண்டும் வீடுதிரும்பவே இல்லை. அவனை இனந்தெரியாத நபர்கள் கடத்தி சென்றுவிட்டனர்.

10 வருடகாலமாக எனது கணவரையும் பிரிந்த நிலையில் 3 பிள்ளைகளுடன் தையல் தொழில் செய்து வாழ்ந்து வருகின்றேன்.

நான்எனதுகுடும்பத்தைகொண்டு நடத்துவதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகின்றேன்.

இதற்கு ஏதாவது செய்து தருமாறும் எனது காணாமல் போன பிள்ளையை மீட்டுத்தருமாறும் பலரிடமும் கோரினேன். ஆனால் எம்மை யாரும் கண்டுகொள்ளவில்லை.

எனது உயிருக்கு என்ன நடந்தாலும் பிரச்சினை இல்லை. நான் கூறுவேன் இங்கு நிம்மதியாக வாழ முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

நான் கஷ்டப்படுவது போல யாழ்ப்பாணம், வன்னியிலுள்ள பெண்களும் கஷ்டப்படுகின்றனர்.

மின்னல் வட்டிக்கு கடன் வாங்கி என் போன்ற பெண்கள் தற்கொலை செய்யும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு தொழில் நிறுவனத்தை ஆரம்பித்து என் போன்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு யாராவது முன்வர வேண்டும்.

நாம் இங்கு வாழ்வு வெறுத்துத் தான் வாழந்து வருகின்றோம் என அந்த இளம் குருத்துக்களை பறிகொடுத்த தாய் முன்னாள் இராணுவத்தளபதியிடம் தனது இரு பிள்ளைகளின் புகைப்படங்களினை காட்டி கதறியழுதார். (அ-4)

# இந்திய துணைத் தூதரக வளாகத்தில் நூலகம்

யாழ். இந்தியா துணைத்தூதரகத்தினால் இல.14, மருதடி வீதியில் அமைந்துள்ள தூதரக வளாகத்தில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.இந் நூலகத்தில் ஆங்கிலம், தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளிலான ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்து மதம், சமயம், வரலாறு, தத்துவம், வெளிநாட்டுக் கொள்கைகள், யோகா, சாஸ்திரிய நடனம், சித்திரம், சமையற் கலை போன்ற பல தரப்பட்ட 400 இற்கும் அதிகமான தமிழ் நூல்கள் அடக்கப்பட்டுள்ளன.

மேலும் சில ஆவணப்படங்கள் மற்றும் குறுந்திரைப்பட இறுவெட்டுக்களும் உள்ளன. மேற்படி தூதரக நூலகத்தைப் பொது மக்கள் முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரையும், பிற்பகல் 2.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

நூல்கள் மற்றும் இறுவெட்டுக்களை இரவல் எடுக்க விரும்புவோர் தூதரக நூலகத்தில் தம்மை அங்கத்தவராக பதிவு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவுகளுக்கு மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக 500 ரூபாவினைச் செலுத்த வேண்டும்.

மேலும், நூலக அங்கத்துவ படிவங்களை தூதரகத்தில் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் விண்ணப்பத்தாரின் அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு அல்லது பெயர், வயது மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஏதாவொரு சான்றிதழின் பிரதியுடன் இணைக்கப்படல் வேண்டும்.

நூலக அங்கத்துவத்தை தொடர விரும்பாதவிடத்து இரவலாகப் பெற்றுக் கொண்ட நூல்களையும், அங்கத்துவ அட்டையையும் மீளளித்து வைப்புப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100-160 | 100 | 100 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 | 140 |
| தக்காளி | 120 | 160 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 140 | 60 | 40 |
| கோவா | 140 | 100 | 120 | 120 |
| கரட் | 80 | 100 | 140 | 120 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 |
| புடோல் | 60 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 160-180 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | – | – | 100 |
| பயற்றங்காய் | 60 | 30 | 50 | 60 |
| லீக்ஸ் | 120 | 130 | 160 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 100 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 180 | 100 | 300 | 200 |
| போஞ்சி | 100 | 140 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 15 | 30 | – |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 35 | 30-40 |
| இராசவள்ளி | 90 | – | 120 | 120 |

# இராசி பலன்

*06.07.2013*
*(ஆனி 22, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*திரயோதசி முற்பகல் 9.07 மணிவரை*
*மிருகசீரிடம் முழுவதும்*
*இராகுகாலம் 8.58-10.28 மணிவரை*
*சுபநேரம் 2.58-4.28 மணிவரை*

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, அந்நியர் சந்திப்புண்டு.

**இடபம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும்,சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், வருமானம் திருப்திதரும்.

**மிதுனம்** உறவினர்களின் அன்புத் தொல்லை கள் ஏற்படலாம், ஒருவகையில் சிக் கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், உடல்ரீதியாக உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்** குறைந்த செலவில் முடியுமென நினைத்த காரியமொன்று கூடிய செலவில் முடியலாம், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**சிங்கம்** இனிமையான நாள், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடுவீர்கள், தொழில் வருமானத்தை அதிகரிக்க வழிவகை செய்வீர்கள், உறவினர் வருகையுண்டு.

**கன்னி** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி இலாபத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்** பழைய பொருட்களை மாற்றி புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிலர் தொழில் ரீதியாக உங்களிடம் உதவிகேட்டு வரலாம்.

**விருச்சிகம்** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, ஆரோக்கியக்குறையுண்டு

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் காண்பீர்கள், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள் நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**கும்பம்** சொத்துக்களால் ஆதாயமுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகள் பொறுப்புணர்ந்து நடந்துகொள்வர், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, தொலைபேசிமூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப வன்முறையில் ஈடுபட்டவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் குடும்ப வன் முறையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் குறித்த குடும்பஸ்தர் தனது மனைவியையும் பிள்ளையையும் தினம் மதுபோதையில் வந்து அடித்து துன்புறுத்தி வந்ததாக மனையால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.





முன்னதாக குறித்த குடும்பஸ்தரை பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவரை தெல்லிப்பழை வைத்தியசாலையின் உள நலப் பிரிவில் சிகிச்சை பெறுமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இவ்வழக்கு நேற்றையதினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தரினால் மருத்துவரின் அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்படபட்டது.

இதனை பரிசீலித்த பதில் நீதவான் குறித்த குடும்பஸ்தரை தொடர்ந்தும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-24)




நன்றி: ஐலண்ட்

# இளைஞனுக்கு பிடியாணை

(கரவெட்டி)

பாடசாலை மாணவி ஒருவரை காதல் திருமணம் செய்து கொண்ட இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

கரணவாய் அண்ணா சிலையடி பகுதியில் 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரை காதல் தொடர்பு கொண்டு திருமணம் செய்யும் நோக்கத்துடன் தலைமறைவாகி வாழ்ந்த இளைஞன் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டதுடன்பாடசாலை மாணவியையும் கைதடி சீர்த்திருத்தப் பள்ளியில் சேர்க்க உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், மீண்டும் பாடசாலை மாணவியும், குறித்த இளைஞனும் திருமணம் செய்யும் நோக்கத்துடன் தலைமறைவாகியுள்ளனர்.

இவ் வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மூன்று வழக்குகளுக்கு சமுகம் அளிக்காத குறித்த இளைஞனுக்கு பிணை வைத்த இரு நபர்களும் மன்றில் ஆஜரர்கினர்.

இதன் போது இரு பிணையாளி களையும் விசார்ணை செய்த பதில் நீதவான் குறித்த இளைஞனை எதிர்வரும் 12 ஆம் திகதி மன்றில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன், இரு பிணையாளிகளையும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டார். (அ-9-23)

# தகராறில் ஈடுபட்ட பெண்களுக்கு ஆட்பிணை வழங்கியது நீதிமன்று

(மானிப்பாய்)

கரவெட்டி மத்தோணி பகுதியில் 85 இலட்றில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட இரு பெண்களை தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நெல்லியடி நகரப்பகுதியில் கையடக்க தொலைபேசி நிலையத்தை நடத்தி வந்த வர்த்தகர் ஒருவருக்கும் குறித்த இரு பெண்கள் 85 இலட்சம் ரூபா பணத்தை கடனாக கொடுத்துள்ளனர். குறித்த வர்த்தகர் இவர்களுடைய 85 இலட்சம் ரூபா பணத்துடன் ஏனையவர்களிடம் வாங்கிய பல இலட்சம் ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டு வெளிநாட்டிற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இருபெண்களும் தமது பணத்தை திருப்பி தருமாறு வர்த்தகரின் தந்தையிடம் தகராறில் ஈடுபட்டதாகவும் பொலிஸ் நிலையத்தில் தந்தையால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையெடுத்து இரு பெண்களையும் கைது செய்த நெல்லியடி பொலிஸார் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதவான் இரு பெண்களையும் பிணையில் செல்ல அனுமதித்ததுடன் குறித்த இருபெண்களாலும் கொடுப்படும் முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்தோடு இவ்வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (அ-9-23)




## இலந்தைக்காடு வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர பெருமான் தேவஸ்தான மண்டலாபிசேக பூர்த்தியும் (சகஸ்ரகத (1008) சங்காபிசேகம்) திருக்கல்யாண உற்சவம் - 2013

**கிரியாகால நிகழ்வுகள்**

06.07.2013 சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் 1.30 மணிவரையுள்ள சுபவேளையில் எம் பெருமானுக்கும் எம் பெருமாட்டிக்கும் சங்காபிசேகம் நடைபெறும். அன்று மாலை 7.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று எம்பெருமான் முத்துச்சப்பரத்தில் வீதியுலா வருவார்.

**உற்சவ குருமார்**

சர்வ போதகர் - செஞ்செற் சாதகன் சிவஸ்ரீ மு.சசிதரக்குருக்கள் (இயக்குநர் - சைவ குருமணிகள் மிசன் பயிற்சிக் கல்லூரி - நாயன்மார்கட்டு)

உற்சவகால பிரதமகுரு - ஷக்தி உபாசகர் சிவஸ்ரீ சி.கமலராஜ் குருக்கள் (பிரதமகுரு வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

**தேவஸ்தான பிரதம குரு**

தற்புருஷ சிவாச்சாரியார், கிரியா துரந்தர் சிவஸ்ரீ உலக.விக்னேஸ்வரக் குருக்கள் (பிரதம குரு கரணவாய் வடக்கு, எள்ளங்குளம் (நாச்சிமார்) ஸ்ரீ பராசக்தி அம்பாள் தேவஸ்தானம், உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலை ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்)

**சர்வசாதகர்**

சிவத்திரு இ.கணேஸ்வரன் ஐயா (மீசாலை)

காலை சங்காபிசேக உபயம் - மேற்படி ஆலய நிர்வாக சபையினர்

மாலை திருக்கல்யாண உபயம் - மேற்படி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ உலக.விஸ்வநாதக் குருக்கள்

மூர்த்தி அலங்காரம் சிவஸ்ரீ தில்லை.அழகேசக் குருக்கள் (கொழும்பு)

நன்றி

சுபமஸ்து

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

(ச-3904)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தேசியத்தின் மீது இறுக்கமான பற்றுக்கொண்ட ஆழிப்புதல்வன் தவரத்தினம்



வடபகுதி வாழ் கடற்றொழில் சமூகத்தினரின் மதிப்புக்குரியவராக விளங்கிய வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரத்தினம் அவர்களின் திடீர் மறைவானது அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல வடபகுதிவாழ் கடற்றொழில் சமூகத்தினருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதுடன் பெரும் இழப்பாகவும் அமைந்துவிட்டது.

தமிழ்த்தேசியத்தின்மீது இறுக்கமான பற்றுக்கொண்டிருந்த இவர் கடற்றொழில் துறைசார்ந்த புலமை பெற்றிருந்ததுடன் கடற்றொழிலாளர் சங்கங்களை ஒன்றிணைத்து அதனை செவ்வனே வழிநடத்திச் சென்ற சிறந்த அருமைமிக்க தலைவராகவும் விளங்கினார். கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக வடபகுதி கடற்றொழில் துறைசார்ந்த விருத்திக்கு இவர் ஆற்றியிருந்த பணி மகத்தானது.

போர்க்காலங்களில் மீனவர்கள் எதிர்நோக்கியிருந்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து எதுவித அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது அடக்கு முறைகளுக்கு உள்ளாகியிருந்த இத்துறையின் விடிவுக்காக குரல் கொடுக்க இவர் தயங்கியதில்லை. போர்க்காலங்களில் ஏற்பட்ட இத்துறைசார்ந்த அழிவுகளின்போதும் சுனாமியின்போதும் ஏற்பட்ட பேரழிவின்போதும் இவர் தலைமையில் இத்துறை மீளக்கட்டியெழுப்பப்படுவதற்கு பெரிதும் உதவியமை எவராலும் மறக்கமுடியாதவை.

தென்பகுதி மீனவர்களினது ஊடுருவலையும் இந்திய மீனவர்களின் ஊடுருவலையும் எதிர்த்து குரல் எழுப்பியவர். தென்பகுதி மீனவர்களுடன் நல்லுறவைப்பேணியதுடன் தென்பகுதிக்கே சென்று அப்பகுதி மீனவர்களின் வருகையினால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் சவால்களை உரிமையுடன் இடித்துரைத்து சுமுகநிலை ஏற்பட வழிசமைத்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழக மீனவர்களின் அத்துமீறலையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட வளச்சூறையாடலையும் இதனால் வடபகுதி கடற்றொழிற்றுறை எதிர்நோக்கும் நெருக்கடிகளையும் பக்குவமாக எடுத்துரைத்து வடபகுதி மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்கும் இடையிலான உறவில் எவ்வித விரிசலையும் ஏற்படுத்தாதவாறு தமது ஆளுமைப் பண்புகளால் தமிழக மீனவர்களால் ஏற்படும் விளைவுகளைத் தமிழ்நாட்டில் வைத்தே விளக்கி அவர்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

தமிழக மீனவர்கள் வடபகுதியில் சிறைபிடிக்கப்பட்டு சிறையில் வாடியபோது அவர்களுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுத்ததுடன் அவர்களது விடுதலைக்காகவும் பாடுபட்டிருந்தமை முக்கியமானவை.

பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டு உயர்கல்வி ஆய்வுக்காக இங்கு வரும்போதெல்லாம் இத்துறைசார்ந்த விடயங்கள் தொடர்பாக அவரை அணுகியபோது இங்குள்ள பிரச்சினைகளை தெளிவாக விளக்கி ஆய்வில் ஈடுபட்டிருந்த மாணவர்களுக்கு உதவினார்.

ஆய்வுகள் தொடர்பாக அவரது உதவிகள் தேவைப்படுகின்றபோது நேரம், காலம் பாராது வீட்டிற்கு அழைத்து விடயங்களை விளக்கி உதவியமை மறக்கமுடியாதவை. அவர் மறைவதற்கு ஒருமாதத்திற்கு முன்னர் கூட அமெரிக்கப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இவரை அணுகியபோது சுகவீனமுற்றிருந்த நிலையிலும் வீட்டிற்கு அழைத்து அவரது ஆய்வு சார்ந்த விடயங்களுக்கு உதவியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழிப்பற்றும் மண் பற்றும் கொண்டவர். இவரது மறைவு தமிழ் தேசியத்திற்கும் கடற்றொழில் சமூகத்திற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவரது ஆன்மா சாந்தியடைவதாக

**பேராசிரியர்**
**சூசை ஆனந்தன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

# குறுந்தகவல் மூலம் டெங்கை அடையாளம் காண திட்டம்

(கொழும்பு)

மொபிட்டல் குறுந்தகவலின் (எஸ்.எம்.எஸ்) ஊடாக டெங்கு நுளம்புகள் உள்ள இடங்களைக் கண்டுபிடித்து அவற்றை ஒழிக்கும் திட்டமொன்றை முன்னெடுக்க கொழும்பு மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மொபிட்டல் நிறுவனத்தின்மூலம் இந்த குறுஞ் செய்திகள் தங்களுக்கு கிடைத்தவுடன் அதுபற்றிய ஆய்வுகளை உடனடியாக நடத்தி சம்பந்தப்பட்ட இடங்களுக்கு சென்று நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று மாநகரசபை தெரிவித்துள்ளது.

சிங்கப்பூரில் உள்ள முபுஸ் நவீன தொலைத் தொடர்பு யுக்தியின் மூலம் இந்த செயற்பாடு வெற்றிகரமாக செயற்படுத்தப்படுகின்றதெனவும் இந்த செயற்றிட்டத்தின் மூலம் தற்போது செயற்படுவதை விட நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் திறமையாக கையாள முடியமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்முறை பத்தாண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூரில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக உதவி செய்வதற்காக சிங்கப்பூரில் இருந்து வருகை தந்த பேராசிரியர் மே ஓ எல்வின் கருத்துத் தெரிவிக்கையில்,

திட்டத்தின் மூலம் காரியாலயத்தில் அமர்ந்தபடியே கணனிகள் மூலம் எந்தெந்த பகுதிகளில் டெங்கு நுளம்பு அதிகமாக தென்படுகிறதென்று அவதானிக்க முடியும்.

இதன்மூலம் டெங்கு நும்புகள் உள்ள இடங்களை கொழும்பு மாநகரத்தின் வடிவமைப்பு படத்தின் மூலம் தெளிவாக காட்டக்கூடிய வகையில் இந்த செய்முறை நடைமுறைப்படுத்தப்படும் என்றார். (அ-2)

# ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாடு 2014 இல் இலங்கையில்

(கொழும்பு)

ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மகாநாட்டின் செயலாளர் நாயகம் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் உயர்மட்ட சந்திப்பை இலங்கையில் நடத்துவதற்கு விடுத்த அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார்.

இம்மாநாட்டின் செயலாளர் நாயகம் சுங் இயு ஷியாங் நேற்று முன்தினம் காலை அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்த போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஏனைய ஆசிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இலங்கையில் அடுத்த மாநாட்டை நடத்துவது தொடர்பாக பெரும் ஆர்வத்துடன் இருப்பதாகவும் ஆசியாவில் உள்ள 100 இற்கும் மேற்பட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் இதில் கலந்து கொள்ளும் என எதிர்பார்ப்பதாகவும் இயு யொங் தெரிவித்தார்.

இத்தகைய மகாநாட்டை நடத்துவதற்கான மிகச் சிறந்த கட்டமைப்பை இலங்கை கொண்டுள்ளது என்று இயு யொங் மேலும் கூறினார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ இவ்வருடம் மே மாதம் சீனாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது பசுமை அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் அழகான ஆசியாவை இணைந்து கட்டியெழுப்புதல் என்ற தொனிப்பொருளில் ஷாங்சி மாகாணத்தில் நடைபெற்ற விசேட மகாநாட்டில் உரை நிகழ்த்தினார். (அ-2)



# மரண அறிவித்தல்

## அருட்செல்வம் பிரசன்னா (Nick)

*(Director - Trio Management Limited , UK - Former Manager, Tessco UK)*

வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திரு.அருட்செல்வம் பிரசன்ணா அவர்கள் 06.06.2013 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் வேலணை மேற்கு, வாதவூரர் அருட்செல்வம் (உரிமையாளர் NSPS, கொழும்பு 11) புவனேஸ்வரி தம்பதியரின் மகனும் சுண்டுக்குழி பாண்டியன் தாழ்வை சேர்ந்த சயந்தி பிரசன்னா அவர்களின் கணவரும் பிரணவ் அருள் அவர்களின் தந்தையும் குணரட்டம் வரதராஜா (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி நிறைவேற்று அதிகாரி), இந்திராதேவி தம்பதியரின் மருமகனும் அனுஷா (USA), உதயணன் (UK), யாழினி, சிவகஜன் (N.S.P.S, V.A.S.Distributors) ஆகியோரின் சகோதரரும் சுரேந்திரன் (USA), யாழினி (UK), யூட் பிரணவன் (UK), சிந்துஜா, கீதன் ஆகியோரின் மைத்துனரும், பிரவீன் (USA), சஜீவன் (USA) ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாலை 2 மணியளவில் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


51/- 1/2, கொலிங்வூட் இடம்
கொழும்பு - 06

தகவல்:
குடும்பத்தினர்

(சி-3901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுந்தாள் பசளைகளின் பயன்பாடும் அதற்கான முக்கியத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 27-IV

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

சூழல் மாசடைதல் பற்றியும் அதனது தாக்கத்தைப் பற்றியும் அதிகூடிய கவன மெடுக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம் அல்லவா. இக்கால கட்டத்தில் சூழல் மாசடைய வைக்கும் காரணிகள் பற்றி நாம் கவனமெடுக்கவேண்டியது அவசியமாகும். எமது பிரதேசத்தில் சூழலை மாசடைய வைக்கும் காரணிகளுள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப் படும் அசேதன இரசாயனங்களின் அதிகரித்த பாவனை மண்ணை, நீரை மற்றும் வளிமண்டலத்தை பாரியளவில் பாதித்துக் கொண்டிருக்கின்றது. பரிந்துரைக்கப்பட்ட அளவிலும் இரண்டு மற்றும் மூன்று மடங்கு பயன்பாட்டில் உள்ள அசேதன இரசாயன பசளைகள் பயிர் செய்யப்படும் பயிர்கள் அகத்துறிஞ்சியது போக மீதமானவை நீரில் கரைந்து நிலத்தடி நீரில் கரைந்து விடுகின்றது.

இந்நிலத்தடி நீர் இருக்கும் இடம் சுண்ணா ம்பு பாறைகளால் ஆனதனால் அவற்றுக்கிடையே இருக்கும் நுண் துளைகள் மூலம் நீர் அங்குமிங்குமாக நிலத்தடியில் பரந்து செல்ல வாய்ப்புக்கள் நிறையவே உண்டு. இவ்வா றான நிலையில் ஓரிடத்தில் மாசடையும் நிலத்தடி நீர் இன்னொரு இடத்திற்கு செல்ல வாய்ப்புக்கள் அதிகமே. பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் அதிகளவிலான அசேதன பசளைகளில் மேலதிகமானவை நீரில் கரை ந்து நிலத்தடி நீரை மாசடையவைக்கும் போது அது நிலத்தடியிலுள்ள ஆற்று மூலமாக இன்னொரு இடத்தில் கலப்பதனால் நிலத்தடிநீர் முழுவதுமே பாதிப்புக்குள்ளாக நேரிடுகின்றது.

இந்த நிலை இப்படியே தொடருமாயின் வருங்காலத்தில் குடிப்பதற்கு நன்னீர் தேடி அலையவேண்டியும் இருக்கின்றது. தென் பகுதியிலிருந்து வரும் போத்தல் தண்ணீரில் நாம் எவ்வளவு காலத்திற்கு தங்கியிருக்கப் போகின்றோம்? எமக்கிருக்கும் வளத்தை நாமே மாசுறவைத்துக் கொண்டு அதற்காக தேடியலையவேண்டியிருப்பது மிகவும் கவனத் திற்குரியதும் வேதனைக்குரியது மாகும்.

நாம் செய்யவேண்டியது இங்கே மிகவும் முக்கியமானது. பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் அளவை வெகுவாக குறைக்க வேண்டியது அவசியமாகும். அதேநேரத்தில் அசேதன இரசாயனத்திற்கு பதிலாக மாற்றுவழிகளை காணவேண்டியதும் அவற்றை ஆய்வு மூலம் கண்டறிந்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டியதும் அவசியமாகும். நீண்டகாலமாக செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து அசேதன பசளைகளுக்கு பதிலாக நுண்ணங்கிகளினாலான கூட்

முகாமையாளர் மன்றத்தில் நிலத்தடி நீர் வல்லுநர் ஒருவர் உரையாற்றியபோது....




டுப்பசளைகளும் அவற்றுடன் தாவரபாகங்களை சேதனப்பசளையாக பாவிக்கும் பசுந்தாள் பசளைகள் மற்றும் பசுந்தாள் இலைப்பசளைகளை இங்கே குறிப்பிடலாம்.

பசுந்தாள் பசளைகளென்பன விளைநிலத்தில விளைவித்து அவற்றை பூக்கும் காலத்தில் வளர்ந்த இடத்திலேயே பிரட்டியுழுதால் மண்ணுக்கு தேவையான பசளை கிடைத்துவிடும். இவற்றில் அவரையின பயிர்களை சிறந்த உதாரண மாக குறிப்பிடலாம். அவையாவன சணல், பயறு, உழுந்து போன்றனவாகும். பசுந்தாள் இலைப் பசளைகளாக பிற இடத்தில் வளரும் தாவரங்களிலிருந்து தாவர பாகங்களை குறப்பாக இலையை வெட்டி விளைநிலத்தில் பயன்படுத்துவதாகும். அவற்றுள் பூவரசு, பன்னை, எருக்கலை என்பனவற்றை குறிப்பிடலாம்.

இப்பசளைகள் இயற்கையுடனிணைந்ததாகவும் தாவரங்களுக்கு மிகவும் பயன்படும் பசளைகளாகவும் இருக்கின்றன. பசுந்தாள் பசளைகள் பயன்பாடு எமது விவசாயிகளுக்கு புதிதான விடயமல்ல. இன்னும் எமது விவசாயப் பெருமக்கள் இதில் கில்லாடிகளும் கூட. குறிப்பாக பூவரசு, பன்னை, எருக்கலை, கிளி றிசிறிடியா மற்றும் பனையோலை என்பன வெங்காயம், புகையிலை, மிளகாய் மற்றும் ஏனைய பயிர்களுக்கு பயன்படுத்துகின்றார்கள். இத்தாவர பசளைகள் தாவரங்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும் மண்ணை வளம்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன என்பதனை ஆய்வு மூலமாக நிரூபித்திருக்கின்றார்கள். அதனையும் தாண்டி இப்பசுந்தாள் பசளைகள் மண்ணில் உள்ள நோயுருவாக்கும் பூஞ்சணங்களை கட்டுப்படுத்தும் இயல்பினைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இதுபற்றிய ஆய்வுகள் இன்னும் எமக்குத் தேவையாயிருக் கின்றன.

எமது பிரதேசத்தில் இருக்கின்ற நாம் எத்தேவைகளுக்குமே பயன்படுத்தாத தாவரங்களின் பாகங்கள் நோயெதிர்ப்பு சக்தியுள்ளதாகவும் இன்னும் பீடையெதிர்ப்பு சக்தியுடையதாக வும் இருப்பதாக தகவல்கள் பல விதந்துரைக்கி ன்றன. ஆனால் நாம் இவற்றைப்பற்றி கண்டும் காணாமல் இருக்கின்றோம். எமது பிரதேசத் திலுள்ள கவனிப்பாரற்றிருக்கும் தாவரங்களின் இயலபுகளைக் கண்டறிந்து அவற்றை நாம் பயன்படுத்த முனையவேண்டும். இவ்வகையான ஆராய்ச்சிகள் எமது சுற்றுச் சூழலிருக்கும் தாவரங்களைப் பயன்படுத்துவதற்கும் இன்னும் அவற்றை பேணவும் வழி சமைக்கும். இன்னும் அநேகமான மூலிகைத்தாவரங்களில் நாம் முன்னர் குறிப்பிட்ட இயல்புகள் நிறையவே உண்டு. அதனால் இம்மூலிகைத் தாவரங்களை இனங்கண்டு அவற்றினது இயல்புகளை பயிர்ச்செய்கையில் பயன்படுத்த நாம் முனைய வேண்டும். எமது சூழலிலுள்ள பல்வகைத்தன் மையை நன்றாக அலசி ஆராய்ந்தால் அவற்றை இயன்றவரையில் பயன்படுத்தும் தொழிலநுட்பத்தை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

விவசாயத்தின் பக்கத்திலிருந்து பார்த்தால அனைத்து தாவரங்களுமே பயிர்ச் செய்கையில் பயன்படக்கூடியதான இயல்பு களைக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பயன்படாத தாவரங்களை அப்படியே ஒதுக்கிவிடாது அவற்றின் இயல்புகளை கண்டறிந்து இயன்ற வரையில் பயன்படுத்தினால் மட்டுமே அசேதன இர சாயன பாவனைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். நாம் நிறையவே இவ்விடயத்தில் எதிர்பார்க்கலாம். இத்துறைசார்ந்த அனை வரையும் அழைக்கின்றோம். வாருங்கள் இணைவோம். எமது பங்கு இதில் அளப்பரியது.







இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா உள்ளிட்ட குழுவினர் யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று நண்பகல் விசேட வழிபாட்டில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் வருகைதந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா உள்ளிட்ட குழுவினர் யாழ். நாச்சிமார் கோவிலடியில் உள்ள மிலேனியம் ஹோட்டலில் தங்கியிருந்ததோடு நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் அங்கு பொது மக்களுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன் பின்பு யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பினை நடத்தியதோடு நண்பகல் 12.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று விசேட வழிபாட்டில் ஈடுப்பட்டனர். (படங்கள் : எஸ்.ஆர்.கரன்)

# ரம்மித் ரம்புக்வெல விடயத்தில் குழு அமைத்து விசாரணை

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

தனது மகன் ரம்மித் ரம்புக்வெல விடயத்தில் தனி நபர் குழு அமைத்து விசாரணைகள் இடம்பெறுவதால் அதற்குரிய நடவடிக்கையினை அக்குழுவே மேற்கொள்ளும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். ஊடக அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

விமானத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் தனிநபர் குழுவொன்று அமைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அது எவ்விதமான தண்டனையாக விருந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அவரது சிறுநீரகமும் பிரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இது ஒரு சிறிய சம்பவமே. இதனை பிரான்ஸிஸ் என்ற பெண்ணே ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார் என்றும் அது குறித்து பிரிட்டிஷ் ஏயார்வேஸ் சிறிய சம்பவம் என தெரிவித்திருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# முதியவர்களுக்கான கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 70 வயதை கடந்த மாத வருமானமாக 3 ஆயிரம் ரூபாவுக்கு குறைவாக பெறும் முதியவர்களுக்கான ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்தில் இணையத் தகுதியுள்ளவர்கள் தமது கிராம அலுவலர்களிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவுகள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோகத்தில் கரைந்தது காதல்

## காதல் திருமணம் செய்த இளவரசன் தற்கொலை

தமிழகத்தை உலுக்கிய தர்மபுரி மாவட்ட கலப்பு திருமணத் தம்பதியரில், கணவன் இளவரசன் ரயில் தண்டவாளத்தில் மூளை சிதறிய நிலையில் நேற்று முன்தினம் பிணமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

அவர் தற்கொலை செய்து கொண்டி ருக்கலாம் என்கிறது பொலிஸ்.

தலித் இளைஞரான இளவரசன் வன்னி யர் வகுப்பைச் சேர்ந்த திவ்யாவை அவரது பெற்றோரின் விருப்பத்தை மீறித் திருமணம் செய்ய, பின்னர் திவ்யாவின் தந்தை தற்கொலை செய்துகொள்ள, அதை அடுத்து தர்மபுரியில் மிகப்பெரிய வன்முறை வெடித்தது....

தர்மபுரி அருகே உள்ள செல்லன் கொட்டாயைச் சேர்ந்தவர் நாகராஜன். இவரது மனைவி தேன்மொழி. இவர்களது மூத்த மகள் திவ்யா (வயது 21) நர்சிங் படித்து வந்தார். இவரும் அப்பகுதியில் உள்ள நாயக்கன்கொட்டாய் நத்தம் காலனியை சேர்ந்த இளவரசன் (வயது 19) என்பவரும் காதலித்தனர்.

### அரசியல் புகுந்தது

டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பா.ம.க இதை அரசியலாக்கும் வரை எல்லாம் சுமுகமாய்த்தான் போனது. இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதைக் காட்டி காதலுக்கு எதிர்ப்பைக் கிளம்பினார்கள்.


இதையடுத்து பல பிரச்சினைகளை கடந்து, கடந்த ஆண்டு ஒக்டோபர் 14ஆம் திகதி இருவரும் திருமணம் செய்து கொண்டனர். பின்னர் இருவரும், பாதுகாப்பு கேட்டு சேலத்தில் உள்ள டிஐஜி அலுவலகத்தில் தஞ்சமடைந்தனர். உடனே உரிய பாதுகாப்பை அளித்து, நாயக்கன்கொட்டாய் நத்தம் காலனிக்கு இருவரையும் அனுப்பி வைத்தனர்

### தந்தை தற்கொலை; கலவரம்

இந்நிலையில் திவ்யாவின் தந்தை நாகராஜன், கடந்த நவம்பர் 7ஆம் திகதி மதியம் வீட்டில் தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து அன்றையதினம் இரவு, நத்தம் காலனி, அண்ணாநகர், கொண்டம்பட்டி ஆகிய கிராமங்களுக்குள் நூற்றுக்கணக்கானோர் புகுந்து வீடுகளை அடித்து நொறுக்கினர். குடிசைகளுக்கு தீயும் வைத்தனர். இதில் 3 கிராமங்களிலும் 268 வீடுகள் தீவைத்து எரிக்கப்பட்டன.அப்போது இருதரப்பினரும் மோதிக்கொண்டனர். இதனால் கலவரம் வெடித்தது. தொடர்ச்சியாக சில கொலைகளால் அதிர்ந்தது தமிழகம். சேதப்படுத்தப்பட்ட சொத்து இழப்பின் மதிப்பு 100 கோடி வரை இருக்கும் என்று சமூகச் செயற்பாட்டா ளர்கள் மதிப்பிடுகிறார்கள்.


### ஆட்கொணர்வு மனுத் தாக்கல்:

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் சென்னை உயர் நீதிமன்றத்தில் திவ்யாவின் தாய் தேன்மொழி, ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்தார். அதன்படி இளவரசனும், திவ்யாவும் நீதிபதிகள் முன்பு ஆஜராகினர். அப்போது திவ்யா, "நான் கணவனுடன் செல்ல விரும்புகிறேன்' எனக்கூறினார். அதன்படி அவரை கணவருடன் நீதிமன்றம் அனுப்பி வைத்தது.



அப்போது இந்த வழக்கு வரும் ஜூன் 6ஆம் திகதி விசாரிக்கப்படும் என நீதிபதிகள் அறிவித்தனர். இதற்கிடையே ஜூன் 5ஆம் திகதி, தனது கணவர் இளவரசனின் குடும்பத்துடன் வசித்து வந்த திவ்யாவுக்கு, தாய் உடல் நலம் குன்றி மருத்துவமனையில உள்ளார் என ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது.

## கலப்பு திருமண கலவரம்



தனது தாயைப் பார்க்கச் சென்றார் திவ்யா. ஆனால் அவர் மீண்டும் இளவரசனின் வீட்டுக்குத் திரும்பவில்லை.

மருத்துவமனையில் விசாரித்தால் அவ்வாறே ஒருவர் அங்கு அனுமதிக்கப்படவில்லை என்பது பின்னர் தெரிய வந்தது.

உடனே மனைவி மாயமானது குறித்து கிருஷ்ணாபுரம் பொலிஸில் இளவரசன் புகார் செய்தார். பொலிஸார் அவரைத் தேடி வந்தனர். அந்த நேரத்தில், ஜூன் 6ஆம் திகதி திவ்யா, தனது தாய் தேன்மொழியுடன் உயர் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது இளவரசனும் வந்தார். அன்றைய தினம் திவ்யா, "தனது தந்தை இறந்ததால், தாய் தனியாக இருக்கிறார். அவருடன் செல்ல விரும்புகிறேன். அதனால் கணவனுடன் செல்ல விரும்பவில்லை என நீதிபதியிடம் கூறினார். இதையடுத்து திவ்யா, தாய் தேன் மொழியுடன் அனுப்பி வைக்கப்பட்டார். அப்போது அடுத்த விசாரணை ஜூலை முதலாம் திகதி நடக்கும் என கூறப்பட்டது. அதன்படி விசாரணை நடந்தது. அன்றைய தினமும் தாயுடன் செல்வதாக திவ்யா கூறினார். இதனால் வழக்கு கடந்த 3ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்படி கடந்த 3ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது திவ்யா, தனது தாயுடன் வந்து ஆஜரானார். இளவரசனும் நீதிமன்றத்தில் ஆஜரானார். அப்போது திவ்யா சார்பில் வக்கீல் பாலு ஆஜராகி, "தாயுடன் மகள் செல்ல நீதிமன்றம் அனுமதி அளித்திருப்பதால், அவரது தாய் தேன்மொழி சார்பில் மகளை ஒப்படைக்கக்கோரி தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெறுகிறோம்' என்றார். இதற்கு இளவரசனின் வக்கீல் சங்கரசுப்பு எதிர்ப்பு தெரிவித்தார்.

பின்னர் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்த திவ்யா கதறி அழுதார். பின்னர் கண்ணீருடன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது: என் தந்தை இறந்துவிட்டார். தாய் தனியாக இருக்கிறார். அதனால் நான் அவருடன் செல்லவே விரும்புகிறேன். இளவரசனுடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. என்னால் தான் எனது தந்தை தற்கொலை செய்து கொண்டார். இதனால் எனக்கு மன உளைச்சலாக உள்ளது. எனது தந்தையின் நினைவாகவே உள்ளது. இதற்கு காரணமான நான் எனது தாயுடன் இருந்து எனது காலத்தை கழிக்க விரும்புகிறேன். என்னால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யவே விரும்புகிறேன். எக்காரணத்தை கொண்டும் இளவரசனுடன் செல்ல விரும்பவில்லை. இவ்வாறு அவர் பேட்டி அளித்தார்.

பின்னர் நேற்று முன்தினம் 4ஆம் திகதி இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதிகள் கூறினர்.

தீர்ப்பு வெளியாக இருந்த நிலையில் இளவரசன், தர்மபுரியில் ரயில் தண்ட வாளத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு இணையவேண்டும்

## கே.பி.வலியுறுத்து

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றதெரிவுக்குழுவில்விலகியிருப்பது பொருத்தமானதல்ல. வடமாகாண சபைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து எவரும் தம்மிடம் ஆலோசனை கோரவில்லை எனவும் போட்டியிடுவது குறித்து நினைத்துப் பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் வருத்தமளிக்கின்றது.

தமிழ்மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழை யாதிருப்பதனை விடுத்து பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் ஈடுபட வேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்று தங்களது கருத்துக்களை வெளியிடவேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமையின் ஊடாக தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வு காணும் செயன்முறையை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தாமதப்படுத்தி வருகிறது.

எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் சகல பிரச்சினைகளுக்கும் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றையே எட்டமுடியும் எனவும் வேறு வழிகளில் தீர்வுத் திட்டங்களை காணமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# எழுத்துப்பரீட்சை பிற்போடல்

யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த எழுத்துப்பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை அறிவிக்கப்பட்ட நேரத்திற்கு நடைபெறும் என பிரதம வாகனப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

குறித்த பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஐ.தே.க சார்பில் போட்டியிட 10 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

மத்திய, வடமேல், வடக்கு ஆகிய மூன்று மாகாண சபைகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்காக 10 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அவர்களில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

இதுவரையிலும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் விண்ணப்பித்துள்ள போதிலும் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் வேட்பாளர் தெரிவுக்குழுவின் முன்னிலையில் முன்னிலைப்படுத்துவர்.

அக்குழுவின் அனுமதி கிடைத்தவுடன் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான வேட்பாளர் தெரிவுக்குழுவினால் இறுதி வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படும் என்பதுடன் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் வரை முதலமைச்சர் வேட்பாளரின் பெயர் அறிவிக்கப்படமாட்டாது என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது. (அ-2)

# பாராளுமன்ற 2 ஆவது அமர்வு

(மானிப்பாய்)

மானிப்பாய் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இரண்டாவது அமர்வு நேற்று வெள்ளிக்கிழமையும் இன்று சனிக்கிழமையும் மஹரகமவில் அமைந்துள்ள இளைஞர் பாராளுமன்றத்தில் நடைபெற்று வருகின்றது.

இம்முறை அமர்வானது இளைஞர்களின் சர்வதேச நிலைப்பாடுகளை வலுப்படுத்தும் முகமாக இளைஞர் கொள்கைத் திட்டமிடல் எனும் தலைப்பு ஆராயப்படவுள்ளது.

இளைஞர் பாராளுமன்ற கொள்கைத்திட்டமிடல் அமைச்சர் இப் பிரரணையை முன்வைத்து இப்பிரேரணை மீதான விவாதங்கள் இடம்பெறவுள்ளன.

இப் பாராளுமன்ற அமர்வு உறுப்பினர்களுக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அனைத்து இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ் 2ஆவது இளைஞர் பாராளுமன்ற அமர்வுகளை கடந்த மாதம் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கின் அபிவிருத்திகளுக்கு நாங்களே காரணமாவோம்

## மனம் திறக்கிறார் பிரதியமைச்சர் முரளிதரன்

(யாழ்ப்பாணம்)

**13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் காலம்·தாழ்த்தியே பேசி வருகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ள மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு எதனையும் பேசிவிட முடியும். ஆனால், செய்துகாட்ட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.**

அத்தோடு வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திக்கு தானும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும்தான் காரணமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபையின் தேவநாயகம் மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற பனம் கைப்பணி கிராம சான்றிதழ் மற்றும் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து அரசாங்கங்களுடன் இணைந்து செயற்படும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல அமைச்சுக்களைப் பொறுப்பெடுத்து அவற்றினூடாக மக்களுக்கு பல சேவைகளைச் செய்துள்ளார்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஜனாதிபதி பிரேமதாச, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க முதல் தற்போது ஜனாதிபதியாகவுள்ள மஹிந்த ராஜபக்ஷ வரையிலான பல அரசியல் தலைவர்களுடன் கடமையாற்றி பல்வேறு உயிர் ஆபத்துக்களை எதிர்கொண்டிருந்த நிலையில் இற்றைவரை மக்களது மேம்பாட்டுக்காக தொடர்ச்சியாக உழைத்து வருகின்றார்.

அவரது தலைமையின் கீழ் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பல்வேறு அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்த நாள் முதலாக தமிழ் மக்களுக்காக உரத்து குரல் கொடுப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்களை ஒருபோதும் செய்ய வேண்டாமென முதல்முதலாகக் கூறியவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்று பிரதி அமைச்சர் முரளிதரன் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தோடு இந்த விடயத்தில் காலந்தாழ்த்தியே தமிழ் கூட்டமைப்பினர் பேசி வருகின்றார்கள். எதிர்க்கட்சியில் இருந்து எதையும் பேசி விடலாம். ஆனால், எதையும் செய்ய முடியாது. எமது உரிமைகளை கல்வியாலும் பொருளாதாரத்தினாலுமே மேம்படுத்த முடியும். வடபகுதி யுத்தத்தினால் முழுமையாக சேதமடைந்த போதிலும் தற்போது அங்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆளும் கட்சியில் வடக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கில் நானும் பங்கெடுத்திருப்பதனால்தான் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தமிழ் மக்களுக்காக தலை நிமிர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களில் நாம் முக்கியமானவர்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# உள்ளூ.சபை வெற்றிடங்களை நிரப்ப விசேட சட்ட மூலம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பவென விசேட ஏற்பாடுகள் கட்டளைச் சட்டம் கொண்டுவர அமைச்சரவை அனுமதி அளித்துள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

2012 ஆம் ஆண்டுக்கான 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிர்வாக தேர்தல் சட்டத்தின் கீழ் இந்த விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின் உறுப்பினர் வெற்றிடம் ஏற்படும் போது அதனை நிரப்புவதில் உண்டாகும் சிக்கல்களை தவிர்க்கும் நோக்கில் இச்சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை மேலும் 53 யோசனைகளில் கீழ் செயற்படுத்த தேசிய செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (அ-2)

# ஆணைக்குழுவின் 53 பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிப்பு

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் 53 பரிந்துரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஏற்கனவே அமுல்படுத்தப்பட்ட பரிந்துரைகளுக்கு மேலதிகமாக இந்த 53 பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படவுள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமைகள் உள்ளக இடம் பெயர்விற்கு உள்ளானவர்கள் வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் சட்டப்பிரச்சினைகள் மற்றும் அகதிகள் தொடர்பில் இந்தப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவுள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு 285 குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால பரிந்துரைகள் உள்ளக்கப்பட்டுள்ளன.

தேசிய கொள்கை, இறுதிக்கட்டயுத்தம், மனிதவுரிமை மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகிய நான்கு பிரதான பிரிவுகளின் அடிப்படையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப்பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதனை கண்காணிக்கும் விசேட செயற்குழுவிற்கு தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# சீரற்ற காலநிலை அனர்த்தம் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையினால் அனர்த்தங்கள் தொடர்பான விசேட அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார்.


அண்மையில் நாட்டில் நிலவிய கடும் காற்றுடன் கூடிய மழையினால் 60 மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் பாரியளவில் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது.


வளிமண்டலவியல் திணைக்களம் உரிய நேரத்தில் எச்சரிக்கையை விடுக்கவில்லை எனவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு உரிய ஏற்பாடுகளை செய்யத் தவறியதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

டாக்டர் ஏ.டபிள்யூ மொஹறட்டல தலைமையிலான குழுவினர் இந்த விசாரணைகளை நடத்தியிருந்தனர். வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர், கடற்றொழில் அமைச்சின் செயலாளர், ஸ்ரீ லங்கா றெலிக்றொம் நிறுவனத்தின் அதிகாரிகள், ஊடக நிறுவனங்கள் ,மீனவ சமூகம் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (அ-2)











புங்குடுதீவு மடத்து வெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வில் பிரதான கும்பங்கள் எடுத்துச் செல்லப்படுவதையும் மூன்று தள இராஜகோபுரத்தில் பூசைகள் இடம்பெறுவதையும் மூலஸ்தான சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறுவதையும் ஆலய முகப்புத் தோற்றத்தையும் திருக்கல்யாண நிகழ்வின் பின் ஆறுமுக சுவாமி வள்ளி தெய்வானை சமேதராய் காட்சியளிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்




## ஆன்மீகம் 53

### அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

...என் ஆர்வத்தில் இடி விழுந்ததும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ஐயா நீங்கள எம்.டி. நீங்க சொன்னால் திருச்சி பகுதி அதிகாரிங்க கேட்பாங்க என்றேன் தயக்கத்துடன்.

இதைக்கேட்ட அந்த மனிதர் இதோ பாருங்க நான் அரசியல் வாதியில்லை. அரசு அதிகாரி. இது என்னால் முடியாத காரியம் பிளீஸ்! என்று கழுத்தை பிடித்து தள்ளாத குறையாக என்னை அனுப்பினார்.

அப்போது தான் இப்படியும் சில மனிதர்கள் என்று மனம் புலம்பியது. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய்நன்றி கொன்ற மகட்கு என்ற வள்ளுவர் வாக்கு என் முன் வந்து என்னை தேற்றியது.

ஒரு நாள் தரும புரிமாவட்டம் ஊத்தங்கரை தாலுகாவைச் சேர்ந்த வெள்ளக்குட்டை எனும் ஊரிலிருந்து திரு.ராமன் எனும் காங்கிரஸ் தலைவர் சித்தர்பெருமானைக் காண வந்திருந்தார். அவர் அரசியல் வாதிகளுக்கே உரிய படைப்பட்டாளங்கள் சூழ பந்தாவுடன் வந்தார். அவரைப் பார்த்தவுடன் அவர் சுத்தப்படுத்த வேண்டிய மனிதர் என்று தோன்றிற்று.

ஒரு மகானைக்காண வருபவர்களிடம் காணப்படும் பக்தி பணிவு எதுவும் அவரிடம் இல்லை. ஏதோ பெரிய தலைவர் தொண்டர் வீட்டு விஷேஷத்திற்கு கடனே என்று வருவது போல் அவர் காட்சி அளித்தார். இப்படிப்பட்டவர்களிடம் கலங்கிய நீரை சுத்தப்படுத்தும் இயந்திரம் போல் செயற்படுவது என் வழக்கம். அப்படி சுத்தமானவர்களைத் தான் சித்தர் அவர்களை காண அனுமதிப்பேன்.



பொதிகை மலையில்

அதோடு வசதியான மனிதர்களை பார்த்தால் அவர்களின் மனதில் தர்ம சிந்தனைகளைத் தூண்டி அன்ன தானத்திற்கு அவரை தயார் செய்து விடுவேன். ஏன் என்றால் அது என் கடமை. சித்தர் அவர்கள் என்னிடம் அளித்த பொறுப்பும் அன்புக் கட்டளையும் கூட. அதை நிறைவேற்றுவது தான் என் தலையாய கடமையாகும்.

அந்த மனிதரிடம் அவரைப்பற்றி விசாரித்தேன். ஊர் பெருமை அவர் செல்வாக்கு செல்வச்செழிப்பு அரசியல் தலைவர் என்ற புகழ் ஆகியவைகளை அவர் வெளிப்படுத்தினார். இதைக்கேட்ட நான் அவரை பலவீனப் படுத்தி அவர் அரசியல் தன்மை பற்றி சொன்னதும் அலட்சியமாக அப்படியா நான் கேள்விப்பட்டதில்லை.

நான் பெரிய பெரிய தலைவர்களிடம் நெருங்கிப் பழகியவன். என் தந்தை பெரிய போலீஸ் ஆபிஸர் என்றெல்லாம் எடுத்துவிட்டேன். அதோடு உங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டதில்லை. ஒருவேளை உங்கள் கிராமத்தை ஒட்டிய ஊர்களில் உங்கள் பெயர் தெரிந்திருக்குமோ?

காங்கிரஸே தமிழ் நாட்டில் செல்வாக்கு இழந்த கட்சி. அதன் பெரிய தலைவர்கள் பற்றிய செய்தியே தேர்தல் நேரத்தில் மட்டுமே வெளி வரும். அதோடு தலைமை அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். கோஷ்டி மோதலைத் தவிர காங்கிரஸ் செய்திகளே பத்திரிகைகளில் வருவதில்லை என்று மடக்கினேன்.

வந்தவர் முகம் கறுத்துவிட்டது. அவரால் ஒன்றும் பேச முடியவில்லை. மௌனமாய் இருந்தார். அவரை சூழ்ந்திருந்த முகங்களும் அதிரிச்சியாய் இறுகிக் காணப்பட்டன.

தொடரும்

# மீண்டும் தி.மு.க- காங்கிரஸ் கூட்டணி...?

கனி மொழி, இந்திய ராஜ்ய சபை எம்.பியாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் 2019 வரை இருக்கும் என்பதால் இனி வரும் நாடாளுமன்ற தேர்தலிலோ அல்லது அடுத்து வரும் சட்டமன்ற தேர்தலிலோ போட்டியிட வேண்டிய அவசியம் அவருக்கு எழவில்லை. அதுமட்டுமன்றி இந்த வெற்றி அவருக்கு தேசிய அரசியலில் மீண்டும் அரசியல் அரிச்சுவடியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும்.

அதுபோல் திராவிட முன்னேற்றக்கழகத்திற்குள்ளும் நிலவும் பனிப்போர் இனி வெவ்வேறு திசைகளில் பரவுவதற்கு இந்த வெற்றி உதவியிருக்கிறது. இனி வரும் காலங்களில் டெல்லியில் தி.மு.கவின் முகமாக கனமொழி இருப்பார் என்பதற்கான அடையாளங்கள் இப்போது தெரியத் தொடங்கிவிட்டன. வெற்றி பெற்றவுடன் அவருக்கு இந்திய பிரதமர் மன்மோகன்சிங் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்ததும் பிறகு கனிமொழி டெல்லி சென்றதும் அவருக்கு உடனடியாக காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் பிரதமர் மன்மோகன் சிங்கும் அப்பாயின்மென்ட் கொடுத்து சந்தித்ததுமே கனிமொழிக்கு டெல்லியில் கிடைக்கவிருக்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

தி.மு.கவிற்கு தேசிய அரசியல். அதாவது டெல்லி அரசியல் எப்போதுமே சிக்கலாகவே இருந்திருக்கிறது. அதற்குக் காரணம் தங்கள் அரசியல் கருத்துக்களை மற்றக் கட்சி தலைவர்களிடம் கொண்டு சேர்க்கும் லாபி செய்யும் முறையை டெல்லியில் தி.மு.க. கடைப்பிடிக்காததே! இதில் ஓரளவு மாற்றத்தைக்கொண்டு வந்தவர் மறைந்த முரசொலி மாறன். அவர் டெல்லியில் அதிகாரம் பெற்று இருக்கும் தி.மு.க. லாபிக்கு டெல்லியில் பஞ்சம் வந்ததில்லை. அந்த வகையிலும் எதிரும் புதிருமாக இருந்த பாரதீய ஜனதாக்கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் 1999 ஆம் வருடம் அகில இந்திய அளவில் உருவான தேசிய ஜனநாயக கூட்டணியில் ஒருங்கிணைந்து இருந்தன என்றால் வாய்பாய் போன்ற மூத்த அரசியல் தலைவரிகளிடத்தில் மறைந்த முரசொலி மாறினின் லாபிக்கு இருந்த வலிமை என்றே சொல்லலாம். அதுமட்டுமல்ல, டெல்லியில் உள்ள தி.மு.க. எம்.பி.களைத் தன் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தவர் மாறன் என்றால்கூட மிகையாகாது.

பிரதமரையோ அல்லது குடியரசுத் தலைவரையோ சந்திக்க தி.மு.க எம்.பிக்கள் போனால் அங்கு போகும் போது என்ன மாதிரியான உடை அணிந்து செல்ல வேண்டும் என் பதைக் கூட முரசொலி மாறனே முடிவு செய்வார். அந்த அளவிற்கு அவர் காட்டும் திசையை நோக்கித்தான் தி.மு.க. எம்.பிக்கள் நகருவார்கள். ஏனென்றால் தி.மு.க தலைவர் கருணாநிதியும் மறைந்த முரசொலி மாறன் மீது அந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தார்.

முரசொலி மாறனின் மறைவு தி.மு.கவுடன் டெல்லி லாபிக்கு பெரும் வெற்றிடத்தை உருவாக்கியது. டெல்லிக்குச் செல்லும் தி.மு.க. எம்.பிக்கள் மீதான கட்டுப்பாட்டையும் தளர்த்தியது. மறைந்த மாறனின் மகன் தயாநிதி மாறனை தி.மு.க தலைவர் கருணாநிதி நாடாளுமன்ற எம்.பி. யாக்கி டெல்லிக்கு அனுப்பி வைத்தார். முரசொலி மாறன் இடத்தை தயாநிதி மாறன் காலப்போக்கில் நிரப்புவார் என்றுதான் நம்பினார். ஆனால் அவர் டெல்லி சென்ற பிறகு நடைபெற்ற சம்பவங்கள் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு முரசொலி மாறனின் மீதிருந்த நம்பிக்கையை தயாநிதி மாறன் மீது தரவில்லை. இதனால்டெல்லியில் உள்ள கூட்டணி தலைவர்களுக்கும் தி.மு.க. தலைவருக்குமே கூட கம்யூனிக்கேஷன் கேப் உருவானது என்றே கூட சொல்லலாம். இதுபோன்ற சூழல்களில்தான் 2 ஜீ அலைக்கற்றை ஊழல் குற்றச்சாட்டு ஏர்செல் விவகாரத்தில் எழுந்த குற்றச்சாட்டுகள் எல்லாம் தி.மு.கவைத் தொடர்ந்து தாக்கியது. அதனால் டெல்லியில் தி.மு.க. மீதிருந்த இமேஜுக்கு பாதகம் ஏற்பட்டது என்று உறுதியாகவே சொல்ல முடியும். அதை வைத்தே தி.மு.கவை நம் போக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று காங்கிரஸ் தலைமை எண்ணவில்லை என்றாலும் அந்தக் கட்சியின் தலைமையில் இயங்கும் முன்னணி அமைச்சர்கள் முடிவுக்கு வந்தார்கள். சி.பி.ஐ விசாரணை டெல்லி கோர்ட்டுகளில் விசாரணை என்றெல்லாம் வெளிவந்த பரப்பரப்பான செய்திகள் டெல்லியில் தி.மு.க.விற்கு மற்ற அரசியல் கட்சிகளுக்கு இருப்பதுபோல் குறிப்பாக தமிழகத்தில் உள்ள இன்னொரு பிரதான கட்சியான அ.தி.மு.கவிற்கு இருப்பதுபோல்கூட இல்லை என்பது வெளிச்சத்திற்கு வந்தது.



2 ஜி அலைக்கற்றை ஊழல் குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு டெல்லியில் தி.மு.க.விற்கு லாபி இல்லை என்ற நிலையையே எடுத்துக் காட்டியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும்சரி காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும்சரி தி.மு.க.வை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லையோ என்ற இமேஜ் ஏற்பட்டது. ஏனென்றால் தி.மு.க.வின் முகங்களாக கருதப்பட்ட மத்திய அமைச்சர் மு.க. அழகிரி கபினெட் கூட்டங்களில் பெரும்பாலும் கலந்து கொள்வதில்லை. நாடாளுமன்றத்தில் முழுவதுமாக இருந்துபதில் சொல்வதில்லை. இன்னொரு முகமான தயாநிதி மாறனுக்கும் தி.மு.கவிற்குமே மோதல் உருவாகி கட்சியிலிருந்து சஸ்பென்ட் செய்யப்பட்டு பிறகு சீட் கொடுக்கப்பட்டு இரண்டாவது முறையாக எம்.பி.யாக சென்றார்.

அவருக்கு எதிராக கிளம்பிய ஏர்செல் விவகாரம் ஆட்டி படைத்தது. சென்ற 2011 சட்டமன்ற தேர்தலில் காங்கிரஸுக்கும் தி.மு.க.விற்கும் தொகுதி பங்கீட்டில் கசப்புணர்வு வளவு தி.மு.க.வின் டெல்லி லாபி வீக் ஆகிப்போனதும் காரணம்.

ஆக மொத்தம் தி.மு.க. வுடன் டெல்லி முகம் யார் என்ற கேள்வி மற்ற கட்சிகளின் தலை வர்கள் மத்தியில் பதில் தெரியாத கேள்வியாகவே இருந்தது.

தொடரும்

எம்.காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

507

## முயற்சி திருவினையாக்கும்



பழுவூரை ஆண்டு வந்த மன்னர் கிருஷ்ணபூபதி தன் குடிமக்களின் நலனில் கண்ணும் கருத்துமாய் இருந்து வந்தார். அவருடைய பட்டத்து ராணியான ஜோத்சனா சிறந்த அறிவாளியாகத் திகழ்ந்தாள். ஒரு முறை, ராணி அவரிடம் மக்களின் நலனை மந்திரி வாயிலாக அறிவதை விட, தானே நேரில் சென்று கண்டறிவது சிறப்பானது என்றும், அதற்காக இரவு நேரங்களில் மாறுவேடமணிந்து மக்களோடு பழகி, அவர்களுடைய குறைகளை அவர்கள் வாயிலாகவே கேட்டறிய வேண்டுமென அறிவுரை பகன்றாள். அது சரியென்று தோன்றவே, மன்னர் அன்று முதல் மாறுவேடமணிந்து நகர்வலம் வரத்தொடங்கினர்.

ஒரு நாள் இரவில் மன்னர்

### அம்புலிமாமா கதைகள்


முதியவர் போல் வேடமணிந்து நகர்வலம் வருகையில், சத்திரத்தின் வாயிலில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த ஒரு தம்பதியைப் பார்த்தார். உடனே, தன் குதிரையை விட்டு இறங்கி மன்னர் அவர்களுடைய உரையாடல் செவிகளில் விழும் தொலைவில் அமர்ந்து கொண்டார். "நாம் தலைநகருக்கு வந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. கையிலிருந்த பணமும் செலவாகி விட்டது. இன்னமும் உங்களால் மன்னரை சந்திக்கவே முடியவில்லை. அப்படியே சந்தித்தாலும் என்ன லாபம் என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந்த ஒன்றேயொன்று கதை சொல்வது மட்டும் தான்! அந்த திறமைக்கு மன்னர் அள்ளிக் கொடுப்பார் என்று எப்படி நம்புகிறீர்கள்?" என்று கேட்டாள் அந்த நபரின் மனைவி!

அதைக்கேட்ட அவர் புன்னகையுடன், வேறு யார் அதை பாராவிட்டாலும், மன்னர் கிருஷ்ணபூபதி கட்டாயம் ரசிப்பார்! அவரை மட்டும் ஒருமுறை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால் போதும்! அதன்பிறகு என் கதை சொல்லும் திறமையினால் அவரைக் கட்டாயம் மகிழ வைத்து விடுவேன்! இப்படித் தான் ஒரு நாவிதன் ஒரு நாட்டு மன்னரை சந்திக்க முயன்று வெற்றி பெற்றான். அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகளைக் கதையாகக் கூறுகிறேன், கேள்! என்று அவர் சொல்லிவிட்டு, கதையைத் தொடங்கினார்.

பல ஆண்டுகளுக்கு முன், கங்கை புரியில் சுந்தரம் என்ற ஒரு நாவிதன் வசித்து வந்தான். முடி திருத்துவதை வெறும் கடமையாக மட்டும் கரு



தாமல், அதை ஒரு கலையாக பாவித்தான். அந்தக் கிராமத்தில் அனைவரும் சுந்தரத்திடம் தான் முடி திருத்திக் கொள்வர்! ஊரிலுள்ள



அனைவரும் அவனைப் பாராட்டுவதைக் கண்டு, நாளடைவில் அவனுக்குள் ஓர் ஆசை துளிர்விட்டது. தனது ராஜயத்தின் மன்னருக்கே முடி திருத்தும் வாய்ப்பு கிடைத்தால், மன்னர் அகமகிழ்ந்து போய் தன்னை ஆஸ்தான நாவிதனாகவே ஆக்கி விடுவார் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அதனால் ஒரு நாள் தன் மனைவியுடனும், பிள்ளையுடனும் தலைநகரை அடைந்தான்.

ஆனால் அவன் நினைத்தது போல் அவன் எண்ணம் அத்தனை எளிதாகக் கை கூடவில்லை. அரண்மனை வாயிலை அடைந்தது, வாயில்க் காப்போரிடம் "நான் முடிதிருத்தும் கலையில் மிக்க வல்லவன். மன்னரிடம் என் திறமையைக் காட்ட விரும்புகிறேன். தயவு செய்து மன்னரை சந்திக்க என்னை அனுமதியளியுங்கள்" என்று கெஞ்சினான்.

அவனுடைய வேண்டுகோளைக் கேட்ட காவலர்கள் அவனை ஏளனம் செய்து திருப்பியனுப்பி விட்டனர். ஆனால் சுந்தரம் தன் முயற்சியைக் கைவிடவில்லை. தினமும் அரண்மனை வாயிலில் மணிக்கணக்காக நின்று பலமுறை காவலர்களைக் கெஞ்ச ஆரம்பித்தான். ஆனாலும் அவர்கள் மசியவில்லை . ஒரு நாள் அவர்களில் ஒருவன், "ஏன் தம்பி வீணாக இங்கு வந்து தினமும் உன் நேரத்தை வீணாக்குகிறாய்? மன்னருக்கு ஏற்கனவே ஒரு ஆஸ்தான நாவிதன் இருக்கிறான்.

அவன் பெயர் மாதவன். அவனைத் தவிர மன்னர் யாரிடமும் முடிதிருத்திக் கொள்ளமாட்டார். அதனால் நீ இங்கு வந்து நின்று கொண்டு எங்களைக் கெஞ்சிப் பயனில்லை" என்றான். தன் முயற்சியில் தளராத சுந்தரம் உடனே மாதவனின் முகவரியைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுடன், அவனைப் பற்றிய விபரங்களையும் சேகரித்தான். மாதவன் அறுபது வயதுக் கிழவன் என்றும், அவனுக்குப் பிள்ளை, குட்டிகள் கிடையாது என்று தெரிந்து கொண்டான். உடனே, தன் மனைவியுடன் கூடிப்பேசி ஒரு திட்டம் தயாரித்தான்.

அதன்படி, தன் மனைவியும் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு மறுநாளே மாதவனைத் தேடிச் சென்றான். அந்த சமயம் மாதவன் தனது வீட்டு வாயிலில் கொய்யா மரத்தினடியில் அமர்ந்திருக்க, அவன் மனைவி சமையலுக்கு காய் நறுக்கிக் கொண்டிருந்தாள்.


எவ்விதத் தயக்கமுமின்றி உள்ளே நுழைந்த சுந்தரம், "அப்பா! சௌக்கியமா?" என்று குசலம் விசாரித்துக் கொண்டே, மாதவனின் அருகில் அமர, சுந்தரத்தின் மனைவி மாதவனின் மனைவியை அணுகி, "அத்தே! மருமகள் நானிருக்க நீங்கள் ஏன் காய் நறுக்க வேண்டும்?" என்று அந்த வேலையைத் தான் செய்யத் தொடங்கினாள்.

சுந்தரத்தின் சிறு பிள்ளை "அப்பா! எனக்கு இந்த மரத்திலிருந்து கொய்யாப்பழம் பறித்துத் தா!" என்று அடம் பிடிக்கத் தொடங்கினாள். "இன்னொருத்தர் வீட்டில் வந்து இப்படியெல்லாம் கேட்கக் கூடாது" என்று கூற, அந்தச் சுட்டிப் பயன் "இது இன்னொருத்தர் வீடு இல்லை! என் தாத்தாவின் வீடு!" என்று ஒரு போடு போட்டான். தன்னைத் "தாத்தா" என்று அந்த சிறு பிள்ளை சொந்தம் கொண்டாடியதும் மாதவன் அந்தச் சிறுவனைக் கட்டியணைத்துக் கொண்டான்.

பிள்ளைபாக்கியம் அற்ற மாதவன் தம்பதி சுந்தரத்தைத் தங்கள் மகனாகவும், அவன் மனைவியைத் தங்கள் சொந்த மருமகளாகவும் நடத்த ஆரம்பித்தனர். தவிர சுந்தரமும் முடிதிருத்தும் தொழில் செய்கிறான் என்று தெரிந்ததும், மாதவனுக்கு அவனிடம் நெருக்கம் அதிகரித்தது. சில நாட்களிலேயே, மன்னருக்கு முடி திருத்தச் செல்லும் போது மாதவன் தன்னுடன் சுந்தரத்தையும் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான். ஒரு நாள் தற்செயலாக, மாதவனால் செல்ல முடியாமற்போக, சுந்தரத்திற்கு தன் திறமையைக் காட்ட வாய்ப்புக் கிடைத்து விட்டது. மாதவனுக்குப் பிறகு அவனே ஆஸ்தான நாவிதனா மாறினான். ஆனால் மாதவன் தம்பதியை தங்களுடனே வைத்துக் கொண்டு பராமரிக்கவும் செய்தான்.

இந்த இடத்தில் கதையை நிறுத்திய அவர், ஒருவனுக்குத் திறமையும், தன்னம்பிக்கையும், விடாமுற்சியும் இருந்தால் அவன் எடுத்த காரியத்தில் நிச்சயம் வெற்றி பெறுவான். அந்த அரிய குணங்கள் என்னிடமும் உள்ளன. அதனால், நானும் என் திறமையைக் காட்டி மன்னரை மகிழ்விப்பேன் என்றும் உறுதியாக நம்புகிறேன்" என்றார். பிறகு, அவர் தனது உரையாடலை சற்றுத் தொலைவில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்த மன்னரை சுட்டிக்காட்டி, "அதோ உட்கார்ந்து இருக்கிறாரே, அவரும் நான் கூறியதைக் கேட்டிருப்பார்! யார் கண்டது? அவரே ஒருக்கால் மன்னரிடம் சிபாரிசு செய்யலாம்!" என்றார்.

அதைக் கேட்ட மன்னர் தனது மாறு வேடத்தைக் கலைத்துவிட்டு அந்த நபரிடம் விரைவிலேயே!,



மன்னரை சந்திக்கும் வாய்ப்பு உங்களுக்குக் கிட்டும்! என்று கூறிப் புன்னகையுடன் வெளியேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் மின்சார கட்டணமாக மக்களின் பணமே செலுத்தப்படுகிறது

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அமைச்சர்களின் வசிப்பிடங்களுக்கான மின்சாரக் கட்டணங்களைக் கூட மக்கள் மீது சுமத்தும் அதேவேளையில், ஊடகங்களுக்கு ஒழுக்க நெறியை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மாத்தறை திப்படுவாவ பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்த அரசாங்கத்தில் 76 அமைச்சர்கள் உள்ளனர். இவர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணங்கள் பொதுமக்களின் பணத்தில் இருந்தே செலுத்தப்படுகிறது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மாதாந்த மின்சார கட்டணம் ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 22 ரூபா. இதனை மக்கள் பணத்தில் இருந்தே செலுத்துகின்றனர். அமைச்சர் காமினி லொக்குகேவின் மின்சார கட்டணங்களையும் அரசாங்கமே செலுத்துகிறது.

இதுபற்றி நான் அவரிடம் கேட்டபோது, தான் அமைச்சுக்கான உத்தியோகபூர்வ இல்லத்தைப் பெறவில்லை எனவும் இதனால்தான் தனது சொந்த வீட்டிலேயே இருப்பதாகவும் கூறினார்.

ஒரு அமைச்சருக்கு தலா ஒரு இலட்சம் ரூபா என 76 அமைச்சர்களின் மின்சாரக் கட்டணங்களும் பொதுமக்களின் பணத்தில் இருந்தே செலுத்தப்படுகிறது. நாங்கள் இதனைத் தவறு என்றே கூறுகின்றோம் எனவும் லால்காந்த கூறினார். (அ-2)

# சொத்துக்களுக்கு உரிமைகோரி நால்வர் வழக்குத்தாக்கல்

முன்னாள் சபாநாயகரும், சிரேஷ்ட அமைச்சருமான அநுரபண்டார நாயக்கவின் சொத்துக்களுக்கு நான்கு பேர் உரிமை கோருகின்றனர்.

அநுரபண்டாரநாயக்க உயிருடன் இருந்த போது, அவருக்கு நெருக்கமாக செயற்பட்ட நான்கு பேர் அவரது சொத்துக்களுக்கு உரிமை கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த சொத்துக்களில் தமக்கும் ஒரு தொகுதி சொந்தமெனவும் அவரது உயிலில் இது குறித்து எழுதப்பட்டுள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், குறித்த உயிலை அநுரபண்டாரநாயக்க உயிருடன் இருக்கும் போதே அவரே கிழித்தெறிந்தார் என அவரின் சகோதரியும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் சுனேத்திரா பண்டாரநாயக்கவும் தெரிவித்துள்ளனர்.

இந்த உயிலின் பிரதியென்று தம்மிடம் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இவரது சொத்துக்கள் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டது.

இந்த வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம்திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தென்மராட்சி பிரதேச கலை இலக்கிய போட்டி முடிபுகள்

(சாவகச்சேரி)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய கலை இலக்கிய போட்டிகளின் முன்னோடியாக தென்மராட்சி பிரதேச மட்டத்தில் பிரதேச செயலக கலாசார பிரிவினரால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில்முதல்மூன்றுஇடங்களைபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு,

***கனிஷ்ட பிரிவு***

***கவிதை பாடும் போட்டி***

சி.சியானி (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), த.சஞ்சிதா (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), ச.தனோயா(கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்),

***கையெழுத்துப்போட்டி***

இ.டிலக்ஷன், சி.வனோயி , ந.சரண்யா (சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை)

***சிரேஷ்ட பிரிவு***

***கட்டுரைப் போட்டி***

ப.டிலக்சனா (எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம்), கு.யதுர்சனா (எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்)

***சிரேஷ்ட பிரிவு***

***கவிதைப் போட்டி***

க.சிலக்ஷனா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்),

***திறந்த போட்டி***

***தமிழ் கவிதைப் போட்டி***

ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு), ச.அகிலன் (கல்வாய்), அ.சிவசாந்தினி (மட்டுவில் கிழக்கு)

***சிறுகதைப் போட்டி***

இ.இராசமலர் (கொடிகாமம்), ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு), கோ.கந்தசாமி (குடமியன் வரணி)

***சிறுகதைப் போட்டி***

***ஆங்கிலம்***

ச. உருத்திராதேவி (டச்சு வீதி சாவகச்சேரி)

***சிறுவர் கதையாக்கப் போட்டி***

பா.கிருஷா(மீசாலை கிழக்கு),ந.பிரிதாவனிதை (சாவகச்சேரி), ந.துஷ்யந்தா (கரம்பகம் எழுதுமட்டுவாழ்)

***பாடலாக்கம் 'தமிழ்***

ந.ரஞ்சனா (நுணாவில் மேற்கு), க.சந்திராதேவி (வெள்ளாம் போக்கட்டி), இ.சிவகாமசுந்தரி (மீசாலை வடக்கு)

***ஆங்கிலப் பாடல் ஆக்கம்***

ஐ.கேதீஸ் (டச்சு வீதி சாவகச்சேரி)

***நாட்டார் கலை கற்றல் போட்டி***

பா.கிரிஜா (மீசாலை கிழக்கு)

***இலக்கிய விபரணம்***

ந. லோஜனவனிதை (கண்டி வீதி சாவகச்சேரி), ரி.கரன் (கைதடி தெற்கு)

# 2013.07 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1044 - புனித ரோமப் பேரரசின் மூன்றாம் ஹென்றி ஹங்கேரி மீது படையெடுத்தான்.

❖1189 - முதலாம் ரிச்சார்ட் லண்டனின் மன்னனாக முடி சூடினான்.

❖1483 - மூன்றாம் ரிச்சார்ட் லண்டனின் மன்னனாக முடி சூடினான்.

❖1484 - போர்த்துக்கீச மாலுமி டியாகோ காவோ கொங்கோ ஆற்றின் வாயிலைக் கண்டான்.

❖1535 - சேர் தோமஸ் மோர் நாட்டுத் துரோகத்துக்காக லண்டனின் எட்டாம் ஹென்றியினால் தூக்கிலிடப்பட்டார்.

❖1560 - ஸ்கொட்லாந்துக்கும் லண்டனுக்கும் இடையில் எடின்பரோ ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

❖1785 - டொலர் ஐக்கிய அமெரிக்காவின் நாணய அலகாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

❖1854 - ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் முதலாவது மாநாடு மிச்சிகனில் நடைபெற்றது.

❖1885 - பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்டர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை விசர் நாய் ஒன்றினால் கடிபட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.

❖1892 - தாதாபாய் நெளரோஜி பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முதலாவது இந்தியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

❖1908 - றொபேர்ட் பியரி ஆர்க்டிக்குக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தில் அவர் வட முனையை அடைந்தார்.

❖1935 - சிங்கப்பூரின் தமிழ் நாளிதழ் தமிழ் முரசு ஆரம்பிக்கப்பட்டது.

❖1939 -ஜேர்மனியில் இருந்த கடைசி யூத தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

❖1947 - சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளை தயாரிக்க ஆரம்பித்தது.

❖1956 - சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.

❖1962 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைக் கொலை செய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்தத் துறவி தூக்கிலிடப்பட்டார்.

❖1964 - மலாவி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖1966 - மலாவி குடியரசாகியது.

❖1967 - நைஜீரியப் படையினர் பயாப்ராவினுள் நுழைந்து போரை ஆரம்பித்தனர்.

❖1975 - கொமொரோஸ் பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖2005 -லண்டன் நகரம் 2012ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

❖2006 - 44 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோனேசியப் போரின் போது மூடப்பட்ட சிக்கிமையும் திபெத்தையும் இணைக்கும் நதுலா பாலம் மீண்டும் திறக்கப்பட்டது.

**பிறப்புகள்**

❖1832 - முதலாம் மாக்சிமிலியன், மெக்சிக்கோவின் மன்னர் (இ. 1864)

❖1870 - பரிதிமாற் கலைஞர், தமிழறிஞர் (இ. 1903)

❖1946 - ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், ஐக்கிய அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதி

❖1946 - சில்வெஸ்ரர் ஸ்ரலோன், அமெரிக்கத் திரைப்பட நடிகர்

❖1980 - பாவ் கசோல், ஸ்பானிய கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புகள்**

❖1893 - மாப்பசான், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1850)

❖1991 - என். ஆர். சின்னராசா, ஈழத்தின் தவில் மேதை (பி. 1934)

❖1991 - கோவை மகேசன், ஈழத்து எழுத்தாளர், பத்திரிகையாளர் (பி. 1938)

❖ 2002 -திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (பி. 1932)

❖2005 - கிளோட் சைமன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1913)

## திருபாய் அம்பானி



திருபாய் என்று அன்புடன் அழைக்கப்படும், தீரஜ்லால் ஹீராசந்த் அம்பானி குஜராத் மாநிலத்தில் சோர்வாத் அருகேயுள்ள குகாஸ்வாடாவில் 1932ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி நடுத்தர வர்க்க மோத் குடும்பத்தில் 'ஹீராசந்த் கோர்தன்பாய் அம்பானிக்கும் ஜமுனா பென்னுக்கும் மகனாக பிறந்தார்.

குடும்ப வறுமை காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தினார்.16 வயதானபோது, ஏமனுக்கு சென்ற அம்பானி அங்கு 300 ரூபாய் சம்பளத்தில் ஏ.பெஸி ரூ கோ. நிறுவனத்தில் வேலை செய்தார். இரண்டு வருடங்களுக்குப் பின், ஏ. பெஸி ரூ கோ. நிறுவனம் ஷெல் தயாரிப்புகளின் விநியோகஸ்தர்களாக ஆகினர். பின்னர் அவரது ஆளுமையினால் ஏடன் துறைமுகத்தில் அந் நிறுவனத்தின் நிரப்பும் நிலையத்தை நிர்வகிக்கும் பொறுப்புக்கு திருபாய் உயர்த்தப்பட்டார்.தொடர்ந்து பலமுயற்சிகளின் பயனாக 15 ஆயிரம் ரூபாவுடன் சுயதொழிலை ஆரம்பித்தார்.

அவர் திருமணவாழ்க்கையில் இணைந்து கோகிலா பென்என்பவரை திருமணம் செய்து கொண்டார்.இவர்களுக்கு முகேஷ் மற்றும் அனில் என இரண்டு மகன்களும், நிதா கோதாரி மற்றும் ரினா சல்கோன்கர் என இரண்டு மகள்களும் பிறந்தனர்.

தொடர்ந்து தனது உறவினருடன் சேர்ந்து மும்பையில் ரிலையன்ஸ் தொழில் நிறுவனத்தை ஆரம்பித்தார். அம்பானி தனது நிறுவனத்தை 1977 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக்கினார். 2007 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடும்பத்தின் இணைந்த சொத்துக்கள் மகன்கள் அனில் மற்றும் முகேஷ் ஆகிய இருவருடையதும் உட்பட 60 பில்லியன் டொலர்களாக இருந்தது.

உலக கோடீஸ்வரர் பட்டியலில் தடம்பதித்த இவர் மாரடைப்பு காரணமாக 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திருமலை மண்ணில் பன்னாட்டுக் கம்பனிகள்



அண்மைக்காலமாக அரசியல் வெளியில் உரையாடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து இப்போது எவரும் பேசுவதில்லை. அந்த அறிக்கைக்கு என்ன நடக்கிறது என்பது குறித்து அரசும் அலட்டிக் கொள்வதில்லை.

அதனை வரவேற்ற பொதுநலவாய நாடுகளின் பொதுச்செயலாளர் கமலேஷ் சர்மா கொழும்பில் மாநாடு நடாத்துவதில் அக்கறை செலுத்தும் அளவிற்கு தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறை பற்றி வாய் திறப்பதில்லை.

இலங்கை மாநாடுகளையும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் வர்த்தக கண்காட்சிகளையும் பாதுகாப்புக் கூட்டங்களையும் நடாத்தும் சர்வதேச நாடுகள் சுதந்திரம் பெற்ற காலம் முதல் தமது பூர்வீக நிலத்தையும் தேசிய இன அடையாளங்களையும் இழந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் நிலை குறித்து பேச மறுக்கிறது.

அபகரிக்கப்பட்ட நிலங்களில் முதலீடு செய்வதில் போட்டி போடும் வல்லரசுகளின் பன்னாட்டுக் கம்பனிகள் இலாபத்தைக் குறியாகக்கொண்ட முதலை ஆளும் நிறுவனங்களாகும்.

விரட்டப்பட்ட மக்கள் குறித்தான கவலையும் சமூகம் சார்ந்த அக்கறையும் அந்நிறுவனங்களின் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கோ அல்லது அதில் முதலீடு செய்யும் பங்குதாரர்களுக்கோ இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறானதாகும்.

யுத்தம் முடிந்துவிட்டது. நாட்டில் சுமுகமான நிலை தோன்றிவிட்டது. வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வருவதில் எத்தடையும் இல்லையென அரசு விடுக்கும் வேண்டுகோள்களை ஏற்றுக் கொள்பவர்களே ஐ.நா.வில் தீர்மானங்களையும் கொண்டு வருகின்றார்கள்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு இந்த வல்லரசுகள் ஊடாக காய்களை நகர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என்போர் இந்நாடுகளில் இயங்கும் பன்னாட்டுக் கம்பனிகளும் அதன் அரச நிறுவனங்களும் குறிப்பாக கிழக்கில் முதலீடு செய்ய முண்டியடிப்பதையிட்டு பேசுவதில்லை.

அவ்வாறு பேசும் போது சர்வதேச அரங்கில் இவர்கள் தம்மைப் புறக்கணித்துவிடும் ஆபத்து இருப்பதால் அதனை இராஜதந்திரம் என்கிற வார்த்தைக்குள் மறைத்துவிடுகிறார்கள்.

சம்பூர் மண்ணை இழந்த மக்கள் அகதி முகாம்களில் வாழ்வது குறித்து மனித உரிமைப்பேரவையில் முறையிடும் இவர்கள் அம்மண்ணில் பன்னாட்டு முதலாளிகள் தொழிற்சாலைகள் நிறுவுவது தவறானது என்று சுட்டிக்காட்டுவாதில்லை.

இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு என்கிற ஜே.பி. லூயிஸின் நூலில் 1800 களில் வன்னி பெருநிலப்பரப்பின் வாழ்வச்சூழல் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருந்தது என்பது குறித்து விபரிக்கப்பட்டது போல இனிவரும் காலங்களங்களில் மூதூர் கிழக்கின் அழிக்கப்பட்ட வாழ்வு பற்றி எழுதப்படும் வரலாற்றுத்துயரம் நிகழும்.

நிறுவன மயப்படும் பௌத்த சிங்கள மேலாதிக்க வாதத்தின் இருப்பினைப் பலப்படுத்த கேப்பாப் பிலவு தொடக்கம் சம்பூர் வரையான பகுதிகளில் நில ஆக்கிரமிப்புகளும் அதில் படைக்குடியேற்றங்களும் தொழிற்சாலைகளும் உருவாக்கப்படுகின்றன.

அங்கு முதலீடு செய்வதற்கான 10 திட்டப் பிரேரணைகளை இலங்கை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிடம் சீனக் கம்பனிகள் சமர்பித்து இருப்பதாக அதன் அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதாவது கிழக்கிலும் மத்திய மாகாணத்திலும் உருக்குத் தொழிற்சாலை தகவல் தொழிநுட்பப் பூங்கா மற்றும் மோட்டார் வாகனங்களை பொருத்தும்தொழிற்சாலை என்பனவற்றை நிர்மாணிப்பதற்கான திட்டங்களே அவை.

அத்துடன் 25-50 மில்லியன் டொலர் முதலீடுட்டைக்கொண்ட சிறு உற்பத்தி தொழிற்சாலைகளும் இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதளவில் மிட்செல் கொன்சோடியம் என்கிற அவுஸ்திரேலிய பன்னாட்டு நிறுவனமொன்றிற்க்கு கனரக இயந்திரங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை சீனி சுத்திகரிக்கும் மையம் மற்றும் இரும்புத் தாதுக்களை உருக்கும் தொழிற்சாலைகள் என்பவற்றை நிறுவுவதற்கு பொருத்தமான இடங்களை ஆய்வு செய்யுமாறு இலங்கை மந்திரிசபை அங்கீகாரம் அளித்திருந்தது.

அதாவது சம்பூரிலுள்ள 97 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் கனரக இயந்திரத் தொழிற்சாலைகளை உருவாக்கும் வகையில் விசேட முதலீட்டு வலயமொன்றினை அமைப்பதுதான் மந்திரிசபையின் நோக்கம்.

ஆனால் இலங்கை முதலீட்டுச் சபையால் கையகப்படுத்தப்பட்ட தமது பூர்வீக நிலங்களை மீட்டெடுக்க சம்பூர் தமிழ் குடிகள் நீதிமன்றில் தொடுத்த வழக்கு அரசின் திட்டங்களை தாமதப்படுத்தியது.

பொதுவாகவே மந்திரிசபைக்கும் இலங்கையின் நீதித்துறைக்குமிடையே அரசியலமைப்பு சட்டம் சார்ந்து முறுகல்நிலை ஏற்பட்டு வருவதை திவிநெகும சட்ட மூலத்தில் முன்னாள் பிரதம நீதிபதி சிராணி பண்டாரநாயக்கா விவகாரங்களில் காணக் கூடியதாகவுள்ளது.

இவை தவிர பாரிய 4000 மில்லியன் டொலர் முதலீட்டில் சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட சிறிலங்கா கேட்வே இண்டஸ்ரீஸ் லிமிட்டட் நிறுவனம் இப் பிரதேசத்தில் பல தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படும் இத்திட்டத்திற்காக 819 ஏக்கர் நிலம் 99 வருட குத்தகைக்கு அப்பன்னாட்டுக் கம்பனிக்கு வழங்கப்படவுள்ளது.

முதல் கட்டமாக 700 மில்லியன் டொலர் செலவில் ஆழ்கடல் இறங்குதுறை நிர்மாணிக்கப்படும். அடுத்த கட்டத்தில் கோக் உற்பத்தி மற்றும் இரும்பு தாது தொழிற்சாலை என்பன 1300 மில்லியன் டொலரில் நிறுவப்படும்.

இத்திட்டத்தின் இறுதிக்கட்டமாக கப்பல்களை வடிவமைத்தல் அதனைப் பழுதுபார்த்தல் போன்றவை தொடர்பான தொழிற்சாலைகளை நிறுவதோடு கனரக இயந்திரங்களை உருவாக்கும் தொழிற்சாலையும் அதனோடு தொடர்புபட்ட சிறு கைத்தொழிற்சாலைகளும் நிர்மாணிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இத்தகைய பாரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டின் ஊடாக பத்தாயிரம் பேர் வேலை வாய்ப்பினைப் பெறுவார்களென்று முதலீட்டு ஊக்குவிப்பு மந்திரி லக்ஷமன் யாப்பா அபயவர்த்தன மகிழ்வடைகின்றார்.

அபகரிக்கப்பட்ட பூர்வீக நிலங்களில் தொழிற்சாலைகளை அமைத்து அகதி முகாம்களில் முடக்கப்பட்ட அம்மண்ணின் சொந்தக்காரர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் அபத்தத்தை என்னவென்று வர்ணிக்க முடியும்?

சர்வதேசத்திற்கு அவ்வூறான தோற்றப்பாட்டினைக் காட்ட முயற்சித்தாலும் வேலைவாய்ப்பில் அதற்கு எதிர்மாறான நிலைப்பாட்டினையே அரசு கடைப்பிடிக்கும் என்பது வரலாறு.

கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் பெரும்பான்மை இனத்திற்கு அதிக வேலை வாய்ப்பினை அளித்து அப்பிரதேசத்தின் இனப்பரம்பலை மாற்றியமைத்த வரலாற்றினை மறக்க முடியுமா?

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் முதலீட்டிற்காக நடைபெறும் ஆக்கிரமிப்பும் தமிழ் தேசிய இனத்தின் நிலத்திற்கான இறைமையை நிராகரிப்பதோடு மட்டுமல்லாது தேசிய இன முரண்பாட்டை மேலும் சிக்கலாக்கும் என்பதை 13 ஆவது திருத்தச்சட்டமே இதற்கான தீர்வு என்போர் கவனத்தில் கொள்வதில்லை.

13,19 என்பதல்ல தமிழ் பேசும் மக்களின் முக்கியமான பிரச்சினை. இது நிரந்தரமான தீர்வுமல்ல.

நாடாளுமன்றத்தெரிவுக்குழு அது குறித்து இடதுசாரிகள் என்று அழைக்கப்படும் அரச பங்காளிகள் எழுப்பும் எதிர்க்குரல்கள் மனோ கணேசன் விக்ரமபாகு போன்றோர் 13 இற்கு ஆதரவாக முன்வைக்கும் அரசியல் என்கின்ற கொழும்பு அரசியல் அரங்கிற்கு அப்பால் வட- கிழக்கில் பறிபோகும் நிலம் குறித்தான விவகாரமே மிக முக்கியமானதும் உடனடியாக எதிர்கொள்ள வேண்டிய சவால் நிறைந்த கட்டமைப்பு சார்ந்த இனவழிப்புமாகும்.

இதயச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மக்கள் சம உரிமையுடன் வாழ்வதையே இந்தியா விரும்புகிறது

## அமைச்சர் நாராயணசாமி

(கொழும்பு)

**இலங்கையின் அரசியல் சாசனத்தின் 13 ஆவது சட்ட திருத்தம் நீர்த்துப் போவதற்கு இந்தியா அனுமதிக்காது என்று பிரதமர் அலுவலகத் துணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழ் மாகாண சபைகளை அமைக்கவும் அவற்றுக்கு அதிகாரங்களை பகிர்ந்து அளிக்கவும் ஏற்பட்ட அந்த உடன் பாட்டையும், சட்ட திருத்தத்தையும் இலங்கை அரசு ஒரு தலைப்பட்சமாக திருத்தமுடியாது என்று தமிழோசைக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில் அவர் குறிப்பிட்டார்.**

அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் பட்டு, இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ்வதையே இந்தியா விரும்புகிறது என்றும் கூறும் அவர், இது இலங்கை அரச தரப்பினரிடம் பல முறை கூறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.



ராஜீவ் காந்தி மற்றும் ஜெயவர்த்தனா ஆகியோரிடையே ஏற்பட்ட ஒப்பந்தமும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட இலங்கை அரசியல் சாசனத்தின் 13 ஆவது சட்ட திருத்தமும் நீர்த்துப் போக நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவது குறித்து இந்தியா அதிருப்தி அடைந்துள்ளது எனவும் அவர் கூறுகிறார்.

இலங்கை அரசு ஒரு நாடாளுமன்றத் தேர்வுக்குழுவை அமைத்து அதன் மூலம் இந்த சட்டத்திருத்தம் குறித்து விவாதிக்கவுள்ளது என்பதே அந்தச் சட்ட திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் ஒரு நடவடிக்கையாகவே இந்தியாவால் பார்க்கப்படுகிறது என்றும் கூறுகிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு விஜயம் செய்த போது கூட, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கையில் அதிகாரப் பகிர்வை கொண்டுவரும் 13 ஆவது சட்ட திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)




நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி கிழக்கு அம்பன் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இதன்போது நெல்லியடி வட்ட லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் யூ.பற்றிக் மாணவர் ஒருவருக்கு கற்றல் உபகரணம் வழங்கி வைத்ததைப் படத்தில் காணலாம்.
(படம்:- தும்பளை செய்தியாளர்)

## வழிகாட்டல் கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தமர்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடை பெற வுள்ளது என ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலன் தெரிவித்துள்ளார். (அ-5)

## தீயில் கருகி தந்தையும் மகனும் உயிரிழப்பு

(கொழும்பு)

பட்டாசு தயாரிக்கும் வீட்டில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் இருவர் தீயில் கருகி பலியாகியுள்ளனர். குறித்த வீட்டில் வசிக்கும் தந்தை மற்றும் மகன் ஆகியோரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நீர்கொழும்பு-கிம்புலாபிட்டிய லூர்து மாவத்தையில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

## போதைப் பொருளை கடத்த முயன்றவர் கைது

இலங்கைக்கு ஒன்பி டைனீன் எனும் போதைப் பொருளை கடத்த முயன்றவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மதுரையில் இருந்து விமான மூலம் இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளுக்கு மூன்றரைக் கோடி இந்திய ரூபா பெறுமதியான குறித்த போதைப் பொருளை கடத்த முயன்றவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் மிஹின் லங்கா விமானத்தில் இலங்கைக்கு பயணம் செய்வதற்காக மதுரை விமான நிலையத்திற்கு வந்தார்.

சுங்க அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில், சுங்க இணை பொறுப்பதிகாரி தலைமையில், பொலிஸார் பயணப் பொதியை சோதனையிட்டனர். பயணப் பொதியின் அடிப்பகுதியை கிழித்து பார்த்தனர்.

அதனுள் **ஒன்பி டைனீன்** என்ற போதை பொருட்கள் பிளாஸ்ரிக் கவர்களில் மறைத்து வைக்கப் பட்டிருந்தது தெரிந்தது. மொத்தம் ஏழு கிலோ போதைப் பொருள் இருந்தது. அவற்றின் சர்வதேச மதிப்பு மூன்றரைகோடி இந்திய ரூபாவாகும்.

அவற்றை இலங்கை மற்றும் மலேசியாவிற்கு கொண்டு செல்வதற்காகவும், முதல் முறையாக இவர் வெளிநாடு செல்வதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சர்வதேச போதை பொருட்கள் கடத்தல் கும்பலுடன் இவருக்கு தொடர்பு உள்ளதா என விசாரணை நடைபெற்றுவருகிறது. (அ-2)

## பாதாள உலக குழு தலைவர் அஸ்மி சுட்டுக் கொலை

கொழும்பு,மாளிகாவத்தை பகுதியில் பாதாள உலக தலைவர் என கூறப்படும் மாமா அஸ்மி அல்லது மாமாஸ்மி என்றழைக்கப்படும் காதர் மொஹமட் அஸ்மின் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். போதைப் பொருள் கடத்தல், கப்பம் பெறல், பாலியல் வல்லுறவு, ஆட்கடத்தல், சட்டவிரோத ஆயுத விற்பனை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த உலகக் குழுத் தலைவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து மூன்று அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாள உலக தலைவராக கொழும்பு நகரையும் அதன் சுற்றுப் புறத்தையும் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியிருந்த இவரை, கைது செய்வதற்காக விசேட அதிரடிப்படையினர் மாளிகாவத்தை பொலிஸார், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு, புலனாய்வுப் பிரிவு என்பன கூட்டாக முயன்று வந்தன. இவரை கைது செய்வதற்கான நடவடிக்கையை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வந்திருந்தனர்.

இந்நிலையில் மாளிகாவத்தை வீட்டில் வைத்து இவர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தப் பட்ட ஆயுதங்களை காண்பிப்பதற்காக ஜீப் வாகனத்தில் அழைத்துச் செல்லும் போது சாரதியின் பின்புற ஆசனத்தில் அமர்ந்திருந்த மாமா அஸ்மி சாரதியின் கழுத்தை இறுக்கி கொல்ல முயற்சித்த போது, ஏனைய விசேட அதிரடிப்படையினர் அதனை தடுக்க முயற்சித்துள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட இழுபறி காரணமாக துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மாமா அஸ்மி உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு பின்புறமாகவுள்ள வீதியிலேயே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த விசேட அதிரடிப்படை வீரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்த பிரபல பாதாள உலக தலைவர்களில் ஒருவரான பாரி என்பவரின் பிரதான சகாவாக மாமாஅஸ்மி இருந்துள்ளார். பாரி என்ற நபரும் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டிருந்ததாக குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-2)

## சங்காபிஷேகம்

தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் கோவில் 108 சங்காபிஷேகமும் மணவாளக்கோல திருவிழாவும் எதிர்வரும் 10 ஆம் தகிதி புதன் கிழமை காலை 8 மணிக்கு இடம் பெறும்.

அன்றைய தினம் மாலை 6 மணியளவில்நடைபெறும் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம் பெற்று எம்பெருமான் வீதியுலா வரும் காட்சி நடைபெறும். இதன் போதுநாதவோசை இசைமணி இ.சிவகுமார் குழுவினரின் விசேட நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறவுள்ளது. (அ-2)

## கைத்துப்பாக்கியை விற்பனை செய்த சார்ஜன்ட் கைதானார்

கைத்துப்பாக்கி ஒன்றை பத்தாயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

பொலிஸ் ஆயுத களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ கைத்துப்பாக்கியொன்று இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் சார்ஜன்ட், தனது மைத்துனரின் ஊடாக கைத்துப்பாக்கியை மற்றுமொரு நபருக்கு விற்பனை செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஆயுதக் களஞ்சியத்தில் வைக்கப் பட்டிருந்த கைத்துக்காக்கியொன்று காணாமல் போனமை தொடர்பில், நடத்திய விசாரணைகளின் போது குறித்த கைத்துப்பாக்கி விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## இனவாத தீயை ஏற்படுத்தாதீர்

### அமைச்சர் வாசு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்களுக்கிடையில், நாட்டிற்குள் இனவாதம் மற்றும் மதவாத தீயை அணைப்பதற்காக நேர்மையாக முயற்சிப்பவர்கள் 50 வீதமானவர்களே என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களில் பெரும்பாலானவர்கள், இனவாத , மதவாத செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அதற்கு இரகசியமான முறையில் பங்களிப்பு செய்து வருகின்றனர்.

தமது இனம் மற்றும் மதம் தொடர்பில் கொண்டுள்ள குருட்டுத்தனமான பக்தி காரணமாகவே அவர்கள் அவ்வாறு செயற்பட்டு வருகிறார்கள். இது நாட்டிற்குள் தேவையற்ற வன்செயல்கள் ஏற்பட வழிவகுக்கும்.

நாட்டில் இன மற்றும் மதவாத தீயை ஏற்படுத்த தாம் தெரிந்தோ தெரியாமலோ உதவி வரும் அமைச்சர்கள் அதனை தற்போதாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறுயுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில் 54 நிலையங்களில் சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல்

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜுலை 6 ஆம் திகதிக்கும் இவ்வாண்டு ஜனவரி 5 ஆம் திகதிக்கும் இடைப் பட்டதில் பிறந்த அனைத்து குழந்தை களுக்குமான சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடு நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி யில் இருந்து மாலை 4 மணிவரை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட 28 நிலையங்களிலும் செட்டிகுளம் பிரதேசத்தில் 10 நிலையங்களிலும் வவுனியா வடக்கு மற்றும் தெற்கில் தலா 8 நிலையங்களிலுமாக வவுனி யாவில் 54 நிலையங்களில் தடுப்பு மருந்தேற்றும் செயற்பாடு இடம் பெற்றது என தொற்றா நோய் தடுப்பு மருத்துவ அதிகாரி வைத்திய கலா நிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அனைத்து தடு ப்பு மருந்தேற்றல் நிலையங்களுக் கும் தொற்றுநோய் தடுப்பு விஞ்ஞான பிரிவு அதிகாரிகள், வவுனியா பிராந் திய சுகாதார பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம். மகேந்திரன், தொற்றா நோய் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ப. சத் தியலிங்கம் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம-266)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகத்தேர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண் டர் ஆசிரியர்களாக 3 வருடம் கடமை யாற்றி இதுவரையில் நியமனம் கிடைக்காதவர்களுக்கான நேர்முகத் தேர்வு இன்று சனிக்கிழமையும் எதிர்வரும் 9ஆம் திகதியும் இடம்பெற வுள்ளதாக முல்லைத்தீவு வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் துணுக்காய் வலயத்திற்கு உட்பட்டவர்களுக்கு எதிர் வரும் 9 ஆம் திகதியும் முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்டவர்களுக்கு இன்று சனிக்கிழமையும் நேர்முகத்தேர்வுகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.(ம-266-267)

## வவுனியாவில் கள்ளநோட்டு; வர்த்தகர்கள் ஏமாற்றம்

(பூந்தோட்டம்)

வவுனியாவில் அண்மைக் காலமாக கள்ள நோட்டு பாவனை அதிகரித்திருப்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான கள்ள நோட்டுக் களை இலகுவில் கண்டு கொள்ள முடியாதிருப்பதாக தெரிவித்த அவர் கள் சில வர்த்தக நிலையங்களில் பணத்தை பரிசோதிக்கும் கருவி கள் இருப்பதனால் கண்டுபிடிப்பதா கவும் தெரிவித்துள்ளனர்.

எனினும்வர்த்தக நிலையங்களில் மக்கள் அதிகமாக உள்ள சந்தர்ப் பங்களை பார்த்து கள்ள நோட்டுக் களை சில ஆசாமிகள் தந்து விடுவ தாகவும் எனினும் இது தொடர்பில் தாம் பொலிஸில் முறைப்பாடுகளை செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் வவுனியா புளியங்குளம் எரிபொ ருள் நிரப்பு நிலையம் மற்றும் வவுனியா தபாலகங்களில் ஆயிரம் ரூபா பெறுமதியான கள்ள நோட் டுக்களை சிலர் கொடுத்து தமது தேவைகளை நிறைவேற்றியிருந் தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் அப் பணத்தினை வழங் கியவர்கள் எவர் என்பது தொடர் பில் தெரியவரவில்லை. (ம-266)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட பண்பாட் டுப் பேரவையால் நடத்தப்படும் அரச அலுவலர்கள் கலை இலக் கிய மன்றங்களுக்கான ஆக்கத்தி றன், கலைத்திறன் போட்டிகள் நடைபெற ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டு அவற்றுக்குரிய விண்ணப்பங்கள் மாவட்ட அரச அதிபரால் கோரப்பட்டுள்ளன.

கட்டுரை, கவிதை, சிறுகதை, பேச்சு, கையெழுத்துச் சஞ்சிகை, பட்டிமன்றம், கவி அரங்கம், சமூக நாடகம், வில்லிசை, குழு நடனம், சிறுவர் கதை கூறல் போன்ற நிகழ்ச்சிகள் போட்டி நிகழ்வாக இடம்பெறவுள்ளன.

விபரங்களை கண்டாவளை, பளை, பூநகரி, கரைச்சி பிரதேச கலாசார பிரிவுடன் தொடர்பு கொண்டு பெறுவதுடன் விண்ணப்ப படிவங்க ளையும் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்படுகிறது. (ம-84)

## சீட்டிழுப்பு முடிவுகள்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக நலன் புரிச் சங்கத்தால் பிரதேசத்தின் கலை, கலாசார, விளையாட்டு சமூக மேம்பாட்டு அபிவிருத்தி நிதிக்காக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு கடந்த மாதம் 26 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பூநகரி பிரதேச செயலகத்தினால் பரிசுக்குரிய சீட்டுக்களின் இலக்கங் கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதலாம் பரிசு இலக்கம் 1629, இரண்டாம் பரிசு இலக்கம் 347, மூன்றாம் பரிசு இலக்கம் 2836.

5 ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங் கள் 3077, 1410, 4618, 568, 29..

வெற்றி பெற்ற சீட்டுக்களை உடையோர் பூநகரி பிரதேச செயல கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கே.எஸ்.வசந்த குமார் கேட்டுள்ளார். (ம-84)

### முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களில்

# பாடசாலை பேருந்து சேவையை நடத்துக

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை, துணுக்காய் கல்வி வலயங்களின் கீழ் 124 பாடசாலைகள் இயங்கி வருகின்ற நிலையில் பாடசாலை பேருந்து சேவை இடம்பெறாமையால் மாணவர்கள் பல அசௌ கரியங்களை எதிர்கொண்டே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.**

இதில் முல்லைத்தீவு கல்வி வல யத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தில் 23 பாடசா லைகளில் 9 ஆயிரத்து 443 மாண வர்களும் கரைதுறைப்பற்று கல் விக் கோட்டத்தின் கீழுள்ள 34 பாடசாலைகளில் 8 ஆயிரத்து 357 மாணவர்களும் வெலிஓயா கல்விக் கோட்டத்தின் கீழுள்ள 6 பாடசாலை களில் ஆயிரத்து 221 மாணவர்க ளுமாக 63 பாடசாலைகளில் 19 ஆயிரத்து 21 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

அதேபோன்று துணுக்காய் கல்வி வலயத்தில் துணுக்காய் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள 18 பாடசாலைகளில் 2 ஆயிரத்து 664 மாணவர்களும் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தின் கீழு ள்ள 16 பாடசாலைகளில் ஆயிர த்து 707 மாணவர்களும் ஒட்டுசுட் டான் கல்விக் கோட்டத்தின் கீழுள்ள 27 பாடசாலைகளில் 4 ஆயிரத்து 256 மாணவர்களுமாக 61 பாட சாலைகளில் 8 ஆயிரத்து 627 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இந்நிலையில் அரச, தனியார் பேருந்துகள் பாடசாலை சேவை யில் ஈடுபடாமையால் ஆயிரக்க ணக்கான மாணவர்கள் பலதூரம் நடந்தும் துவிச்சக்கர வண்டிகளி லும் பல சிரமத்தின் மத்தியில் சென்று கல்வி கற்கின்ற நிலை காணப்படுகின்றது.

போரினால் பாதிக்கப்பட்டு அனை த்தையும் இழந்து நிர்க்கதியாக்கப் பட்ட நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப் பட்டபோது இன்றுவரை பாடசாலை பேருந்து சேவை இடம் பெறாதது வேதனைக்குரிய விடயமாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 இ.போ.ச பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. கிளிநொச் சியில் இருந்து 2 இ.போ.ச பேருந் துகள் முல்லைத்தீவிற்கு சேவைக் காக வந்து செல்கின்றன.

அத்துடன் முல்லைத்தீவு மாவட் டத்திற்கு சொந்தமான 120 தனி யார் பேருந்துகள் சேவையில் ஈடு பட்டு வருகின்றன.

வவுனியாவில் இருந்து 25, கிளி நொச்சியில் இருந்து 7, மன்னாரில் இருந்து ஒன்று, யாழ்ப்பாணத்தில் இருந்து 5 தனியார் பேருந்துகள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சேவை க்காக வந்து செல்கின்றன.

இந்நிலையில் ஒரு தனியார் பேருந்தோ அல்லது இ.போ.ச பேருந்தோ பாடசாலை சேவைக் கென ஈடுபடுத்தப்படவில்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு இ.போ.சபையினரிடம் கேட்டபோது பாடசாலை சேவையை நடத்துவதற்கு இ.போ.ச பேருந்துகள் பற்றாக்குறை யாகவே உள்ளது. அதனாலேயே பருவகால சிட்டைகளும் வழங்கப்பட வில்லை என தெரிவித்தனர்.

எனவே, முல்லை.மாவட்ட அரச அதிபர் மாணவர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு பாடசாலை பேருந்து சேவை இடம்பெற ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத் துள்ளனர். (ம-267)




### வவுனியா வடக்கில்

## நுளம்பு ஒழிப்பு வாரம் அனுஷ்டிப்பு

(பூந்தோட்டம்)

தேசிய நுளம்பு ஒழிப்பு வார த்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி அலுவலகத்தினால் சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் முன் னெடுக்கப்பட்டன.

புளியங்குளம் தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பொதுமக்களும் இணைந்து புளி யங்குளம் தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம் மற்றும் பழைய வாடி கிராமங்களில் ஏற்பாடு செய் திருந்த சிரமதானத்தில் மக்கள் பலரும் கலந்து கொண்டு பங்கே ற்று நுளம்பு பரவக்கூடிய இடங் களை அழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க. பரந்தாமனின் ஆலோசனைக்கமைய நெடுங் கேணி சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி கே. ஜீவலதா தலைமையில் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரி வில் பரவலாக இடம்பெற்று வரும் இச் சிரமதான நிகழ்வில் பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-250-266)



பூநகரி பிரதேச செயலர் பிரிவின் மத்தியஸ்தர் குழுவிற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வும் சின்னம் அணியும் நிகழ்வும் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. தெரிவு செய்யப்பட்ட 22 மத்தியஸ்தர் குழு உறுப்பினர்களையும் படத்தில் காணலாம். (படம்:- பூநகரிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தொழில் வழிகாட்டல் பயிற்சி

(குருமன்காடு)

வவுனியா, முல்லைத்தீவில் நடைபெற்று வந்த ஆசிரியர் நிய மனம் பெற்றவர்களுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியின் நிறைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

அண்மையில் ஆசிரிய நியம னம் பெற்ற பட்டதாரிகள், ஆசிரிய உதவியாளர் நியமனம் பெற்றவர் கள் உட்பட ஒப்பந்த அடிப்படை யிலான ஆசிரியர்களுக்கு வவு னியா மற்றும் முல்லைத்தீவில் கடந்த ஒரு வாரகாலமாக பயிற்சி நெறிகள் இடம்பெற்று வந்த நிலையிலேயே நேற்று முன்தினம் நிறைவு நாள் நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர்ஜி.ஏ. சந்திரசிறி, வட மாகாண ஆளுநரின் வவுனியா ஆணையா ளர் முகைதீன், வவுனியா தெற்கு வலய கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமதி பால பிரேமரத்தின, வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(ம-250-266)

# நீர்த்தடுப்பணைகள் விசமிகளால் உடைப்பு

## உவர் நீர் உட்புகும் அபாயம்

(பூநகரி)

**பூநகரிப் பிரதேசத்தின் ஆலங்கேணி தொடக்கம் நல்லூர் வரையான உப்பளவன் கடற்கரைப் பகுதியில் இனந்தெரியாதோரினால் நீர்த்தடுப்பணைகள் உடைத்து கற்கள் களவாடப்பட்டு வருவதால் உவர் நீர் உட்புகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

உப்பளவன் கடல் நீர் தடுப்பணை கடந்த 2012 ஆம் ஆண்டு மக்களின் பங்களிப்புடன் அரச நிதியில் கட்டப்பட்டது. கருங்கற்களால் அமைந்த இவ் அணைக்கட்டுக்களின் கற்களை உடைத்து இரவு வேளைகளில் களவாடிச் செல்கின்ற சம்பவம் கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பாக நல்லூர் கிராம சேவையாளர் அ.பரமேஸ்வரன் தெரிவிக்கையில்,

உப்பளவன் கடல் நீர் தடுப்பணைகளிலுள்ள கற்கள் களவாடப்படுவதாக விவசாய அமைப்பினர் முறைப்பாடு செய்துள்ளதுடன் பொது மக்களும் அறிவித்துள்ளனர். இப் பிரச்சினை பற்றி தான் பிரதேச செயலருக்கு அறிவிக்கவுள்ளதுடன் பொலிஸாரின் கவனத்திற்கும் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பூநகரி பிரதேசத்தில் விவசாயம் அதிகமாக செய்யப்பட்டுகின்றது. இங்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் உப்பளவன் கடல் நீர் பிரதேசத்தினுள் புகுந்ததினால் விவசாயக் காணிகள் பாதிப்படைந்ததுடன் கிராமங்களின் கிணறுகளும் உவர் நீராகிய சம்பவம் இடம் பெற்றது.

அதன் பின்னர் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இவ்வாறானதொரு நிலைமை மீண்டும் உருவாகி விடக்கூடாது என விவசாயிகளும் பிரதேச மக்களும் முயற்சி செய்ததன் பயனாகவே கடந்த 2012 ஆம் ஆண்டு அணையினைக் கட்ட அரசாங்கம் முன்வந்து பல இலட்சம் ரூபா செலவில் நீர்த்தடுப்பு அணை கட்டப்பட்டது.

இந்நிலையில் தற்போது கட்டப்பட்ட அணையின் கருங்கற்களை களவாடிச் செல்லும் சம்பவத்தினைத் தடுக்க உரியவர்கள் முன் வர வேண்டும்.

தடுப்பு அணையினை உடைக்கும் சம்பவத்தினை தடுக்காத பட்சத்தில் விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டு அப்பிரதேச மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகி விடும் நிலை ஏற்படும் என்பது சுட்டிக் காட்டத்தக்கது. (ம-9-84)

# ஆபத்தான நிலையில் உள்ள தொலைத்தொடர்பு கம்பம்




(படம்:-எம்.கௌரிகாந்தன்)


ஏ-9 வீதியின் பளைப் பிரதேச சபைக்கு அருகாமையிலுள்ள தொலைத் தொடர்பு கம்பத்தின் அடிப்பகுதி சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக தொலைத்தொடர்பு கம்பம் சேதமுற்றுள்ளதால் எந்த வேளையிலும் விழக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

ஏ-9 வீதியினால் தினமும் அதிகளவான போக்குவரத்து இடம் பெற்று வருகின்றது. அத்தோடு சேதமடைந்துள்ள தொலைத்தொடர்பு கம்பத்தின் அருகாமையில் பாதசாரிக் கடவையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஆபத்தான நிலையிலுள்ள தொலைத் தொடர்பு கம்பம் எந்த வேளையிலும் சரியும் நிலையிலுள்ளதால் போக்குவரத்தில் ஈடுபவர்கள் விபத்தில் சிக்கும் நிலை ஏற்படலாம்.

எனவே, விரைவாக சம்பந்தப்பட்ட தரப்பினர் கம்பத்தை மாற்றியமைக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம-9-16)



**நாகம வைத்திய பீடத்தின் பேச்சும் செவிமடுத்தலும் விஞ்ஞானமும் எனும் பீடத்தினால் மு/விசுவமடு மகாவித்தியாலய மாணவர்களுக்கு பேச்சும் செவிமடுத்தலும் தொடர்பான கருத்தரங்கு பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இக்கருத்தரங்குகளில் விளக்கம் கொடுக்கும் றாகம வைத்திய பீட மாணவரையும் அதில் பங்குபற்றிய பாடசாலை மாணவர்களையும் படத்தில் காணலாம்.**

# ஏற்றத்தாழ்வுகளற்ற கல்விச் செயற்பாடுகள் நிறைவான சமூகத்தை உருவாக்கும்

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

ஏற்றத்தாழ்வுகள், பாரபட்சமற்ற கல்விச் செயற்பாடுகளே ஒரு பிரதேசத்தில் நிறைவான சமூகத்தை உருவாக்கும். அதனை நோக்கியே நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் கிளிநொச்சி மாயவனூர் பாடசாலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிக்கொட் திட்டத்தின் கீழ் 50 இலட்சம் ரூபா செலவிலும், இந்திய அரசின் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டடங்களை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் இலவச கல்வி என்பது இனம், மதம், சமூக வேறுபாடுகளுக்கு அப்பால் எல்லோருக்கும் சமமாக வழங்க வேண்டும் என்பதே. இதன் மூலமே நாட்டில் அனைவரும் எதிர்பார்க்கின்ற ஒரு நிறைவான கல்விச் சமூகத்தை ஏற்படுத்த முடியும். இந்த மாவட்டத்தில் நாம் அதனை நோக்கியே கல்விச் செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றோம் எனத்தெரிவித்த அவர், தற்போது கல்வி கற்பதற்கான சிறந்த சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த சூழலை பெற்றோர்களும் மாணவர்களும் நன்கு பயன்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதற்காக நாம் எல்லா வகையிலும் பக்க பலமாக இருப்போம் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் கிளிநொச்சி மாயவனூர் பாடசாலை எவரும் எதிர்பாராத அளவுக்கு வியக்கத்தக்க மாற்றம் கண்டுள்ளது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இருந்த நிலைமைக்கும் தற்போது உள்ள நிலைமைக்கும் பெருமளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

எனவே, இந்த முன்னேற்றத்தை பயன்படுத்தி இந்த பிரதேசம் கல்வித்துறையில் சிற[illegible] வேண்டும் எனக் கு[illegible] பாராளுமன்ற உறுப்பினர், மாயவனூர் பாடசாலைக்கு தேவையான விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு மாயவனூர் பிரதேசத்திற்கான மின்சார விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு அடுத்த வாரம் இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் அதிகாரிகள் வருகைதந்து திட்ட மதிப்பீடுகளை மேற்கொண்ட பின்னர் ஒரு மாதத்திற்குள் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் திருமதி லக்சாந்தி கோபால்ராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை முகாமைத்துவ பிரதி கல்விப்பணிப்பாளர் செல்வராசா, ஆரம்ப பிரிவு உதவி கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், கரைச்சி பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் சிவகுமார், கிராம சேவையாளர்கள் றூபசிங்கம், ஜோன்ஜெகநாதன் மற்றும் அயற் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்[illegible] (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுதின விழா கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன

சர்வதேச 91 அவது கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு முல்லைத்தீவு கூட்டுறவு உதவி ஆணையாளர் ஆர்.பாலச்சந்திரன் தலைமையில் விழா தொடர்பான கூட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் விழாக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதன் படி போசகராக ஆர்.பாலச்சந்திரன், தலைவர் எஸ்.அன்னலிங்கம், உப தலைவர் சி.நாகேந்திரராஜா, செயலாளர் சி.வேதவனம், பொருளாளர் எஸ்.சிவரூபன், இணைப்பாளர் ஆர்.செபஸ்தியாம்பிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்து தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் இவ்வாண்டும் அங்கத்தவர்கள் வீட்டுத் திட்டம் முல்லை.மாவட்ட ப.தெ.வ.அ. கூட்டுறவு சங்கங்களின் இரண்டு அங்கத்தவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுப்பதாகவும் கூட்டுறவு வாரத்தினை கொண்டாடுவதாகவும் இம்மாத இறுதிப் பகுதியில் மாவட்ட விழாவை நடத்தி முடிக்கவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன.

ஆண்டு விழாவினை கடந்த ஆண்டு விழாவினைப் போன்று நடத்த சங்கம் முடிவெடுத்ததுடன் பாடசாலை மட்டத்தில் பேச்சு, கவிதை, கட்டுரை, விநாடிவினா போட்டிகளையும் பணியாளர் மட்டத்தில் பேச்சு, கவிதை, விவாத அரங்கம் போன்றனவும் அங்கத்தவர் ரீதியில் ஆண், பெண் நீண்ட தூர துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற போட்டிகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன் சிறந்த அங்கத்தவர் தெரிவில் 5 பிரதேச செயலர் பிரிவு ரீதியாக 5 பேரும் சங்க மட்டத்தில் சிறந்த வினைத்திறன் கொண்ட கிளை முகாமையாளர் தெரிவும் கடல்சார் போட்டிகள், பனை தென்னை சார் போட்டிகள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் தற்போது இயங்கி வரும் பாடசாலைகளுக்கிடையிலான 10 ஓவர் கொண்ட மென்பந்தாட்டம் போன்றவையும் நடத்தப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட விழாக் குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (அ-ம-9)

# 13 குறித்து மேனன் வாய் திறந்தால் கடும் போராட்டங்கள் வெடிக்கும்!

## சிங்கள கடும்போக்கு அமைப்புகள் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கைக்கு நாளை வரவுள்ள இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வாயைத் திறந்தால் கடும் போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என கடும்போக்கு சிங்கள அமைப்புகள் எச்சரித்துள்ளன. பொறுமைக்கும் எல்லை உண்டு. அயல் நாடென அனைத்தையும் பொறுத்தோம். க்டைசியில் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி இலங்கையை துண்டாக்க சதி செய்யப்பட்டது.**

தற்போது மீண்டும் அதே சதித்திட்டத்தை சர்வதேச மற்றும் தமிழ் பிரிவினைவாதிகளுடன் இணைந்து இந்தியா முன்னெடுக்க நினைத்தால் நீண்ட நாள் உறவை துண்டிக்க நேரிடும் என்றும் அவ் அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கை ஒரு சுயாதீன நாடு. உள்ளக தீர்மானங்களை நிறைவேற்றவும் தீர்மானிக்கவும் யாரிடமும் அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இலங்கைக்கு கிடையாது.

1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் போன்று அச்சுறுத்தி எதனையும் இலங்கையில் செய்து விடலாம் என இந்தியா மீண்டும் நினைப்பது வெறும் பகற் கனவாகவே அமையும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அமைப்பாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து யார் வேண்டுமென்றாலும் இலங்கை வரலாம். ஆனால், உள்நாட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அதற்கு அனுமதி வழங்கப்போவதும் இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தை வைத்துக் கொள்வதா? வேண்டாமா என்பது உள்நாட்டு விவகாரம் ஆகும். மக்கள் விரும்பாவிட்டால் அதனை உடனடியாக நீக்கி விடுவோம். இதற்காக ஏனைய நாடுகளிடம் ஆலோசனை பெறும் தேவை இலங்கைக்கு கிடையாது.என்றும் அவர் கூறினார்.

இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனின் இலங்கை வருகை எதற்கென்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இலங்கைத் தலைவர்களுடன் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு ஏதேனும் பேசி உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டால் கடும் போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என பொதுபல சேனாவின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு எதிர்ப்பு மகஜரை கையளித்துள்ளோம்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்டோர் அவதானமாக செயற்பட வேண்டும். இந்தியாவின் உள்ளக விவகாரங்களில் இலங்கை ஒருபோதும் தலையிட்டதில்லை. அதே போன்று இந்தியாவும் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

## கோப் குழுவின் அறிக்கை விரைவில் நாடாளுமன்றுக்கு

கோப் குழு எனப்படும் நாடாளுமன்ற பொது வர்த்தக மத்திய குழுவின் அறிக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டின் நடவடிக்கைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த அறிக்கையே இவ்வாறு தாக்கல் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோப் குழுவினால் இந்த முறை 256 நிறுவனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 110 நிறுவனங்கள் தொடர்பில் இறுதி அறிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களுள் மின்சார சபை,ஸ்ரீலங்கன்விமான சேவை, மிஹின்லங்கா விமான சேவை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, சமுர்த்தி அதிகார சபை மற்றும் இலங்கை கனியவளக் கூட்டுத் தாபனம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள் என.

கோப் குழு தமது அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் எதிர்வரும் 9 ஆம் திகதி கூடவுள்ளதாக குழு உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (அ-2)

**காணிகள் விற்பனைக்குண்டு**

அல்வாய் மேற்கு, திக்கம் வடிசாலைக்கும் தேவரையாளி கண்ணகை அம்மன் கோயிலுக்கும் இடையில் வெட்டுக் கிணற்றுடன் கூடிய 12 பரப்பு தோட்டக்காணியும் வீடு கட்டக்கூடிய 9 பரப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. மா, பலா தென்னை போன்ற வருமானம் தரும் மரங்களும் உண்டு. வேம்பு, பனை மரமுமுண்டு.

தொடர்புகளுக்கு:
1. திரு.சின்னத்துரை நடராசா. 021 226 2687
2. Dr.இ.கனகலிங்கம். 0779522105

(அ/3875)

**முகவர் தேவை**

பாலில் இருந்து தயாரிக்கப்படும் யூஸ், தயிர், நெய் என்பனவற்றுக்கான வினியோக விற்பனை முகவர் தேவை.

தலைவர்,
கால்நடை வளர்ப்போர்,
கூ.சங்கம் பூநகரி.

தொடர்புகளுக்கு 0213208496

(அ/389)

**வாழ்க வையகம் வாழ்க வளமுடன்**

**பயிற்சியே சிகிச்சை**

**இலவசமாக உடற்பயிற்சி வழங்கப்படும்**

**இடம்:** 14/4, ஆஸ்பத்திரி வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
**பயிற்சி நேரம்:** மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரை
**தினம்** : வியாழன், வெள்ளி, சனி
**தொடர்பு** : 021 320 2286

(இ)

**தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பம்**

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்திற்கு 4 மாத காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்களை சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமை: NCT (Civil) முடித்தவராக இருத்தல் வேண்டும்.
2. வயது: 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
3. தொழில்: முழங்காவில், ஜெயபுரம் மற்றும் கிராஞ்சி ஆகிய இடங்களில் அமைக்கப்படும் பால் சேகரிப்பு நிலையங்களின் கட்டுமான பணிகளை மேற்பார்வை செய்தல்.
4. சம்பளம்: நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரி தனது சுயவிபரத்தினையும் கல்வி உறுதி சான்றிதழ் வேலை அனுபவ சான்றிதழ் என்பவற்றினை 15.07.2013 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் தலைவர், பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

தலைவர் ,
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.

(3889)

**இவர்களுக்கு மணமகள் தேவை** | **கல்யாண மாலை** | **இவர்களுக்கு மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து(v)<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா : 37.75<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L அரச உத்தியோகம்சைவ போசனம்<br>தொ.இ:B676 | பிறப்பு: 1983 இந்து(Na)<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா : 61 செ 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA, NCAT முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G908 |
| பிறப்பு: 1989 இந்து(V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: UK Student Visa<br>தொ.இ:B679 | பிறப்பு: 1969 இந்து(V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா :34.25 செ 7<br>உயரம்: 5'4 "<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியை<br>தொ.இ:G909 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>4உயரம்: 5'10" சூ.செ 11<br>கி.பா:15<br>தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர் Uk Student Visa<br>தொ.இ:B682 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா : 46<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G910 |
| பிறப்பு: 1985 RC(Pa)<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா : 34.5<br>உயரம்: 174Cm<br>தகைமை/தொழில்: Diploma, BA<br>தொ.இ:B683 | பிறப்பு: 1970 இந்து(V)<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா : 35 செவ் 2<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில;<br>BA,MA முகாமையாளர் வங்கி<br>தொ.இ: G912 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

**வாடகைக்கு**

சுழிபுரம் காளுவான் சந்தியில் மூளாய் றோட்டில் வீடு வாடகைக்கு உடனடியாக உண்டு. ரியூட்டறிஸ் நிறுவனங்கள் விரும்பத்தக்கன.

தொடர்புகளுக்கு
0778678392,
0112713521

(3187)

**விற்பனைக்கு**

23 அடி நீளம் 3 1/2 அடி உயரம் 3', 2' இரும்பு கேடரில் செய்த ஊசிக்கால் இரண்டு விற்பனைக்கு உண்டு. கறாஜ், தொழிற்சாலை மற்றும் ஏனைய பாவனைக்குரிய ஊசிக்கால்.

தொடர்புகளுக்கு
சேர்.பொன். இராமநாதன் வீதி
(பல்கலைக்கழகத்துக்கு அண்மையில்)
0777833807

(3186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்று நீதிபதியாக இருந்து தண்டனை தருமுன் நண்பனாய் இருந்து எச்சரிக்கை செய்யும்
- ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சரத் பொன்சேகா மறந்து விடக் கூடாது

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

நீண்ட காலம் சிறையில் இருந்து விடுதலை பெற்ற அவர் யாழ்ப்பாணத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்திருப்பது முக்கியமான விடயம் .

எனினும் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடு, தமிழ் இளைஞர்கள் மீது அவர் நடத்திய கடூரம் இவை எதனையும் தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்பதை சரத் பொன்சேகா மறந்து விடக்கூடாது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து சரத் பொன்சேகா போட்டியிட்டபோது, தமிழ் மக்கள் பொன்சேகாவை ஆதரித்தனர்.

இவ்வாறான ஆதரிப்பு தங்களுக்கு நடந்த கொடூரத்தை ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்த வேண்டும் என்பதற்கானதே அன்றி சரத் பொன்சேகா தமிழ் மக்களின் மீட்பர் என்பதற்காக அல்ல என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்துவது பொருத்துடையது ஆகும்.

இந்த நாடு பௌத்த சிங்கள மக்களுக்கு உரியது. வேண்டுமாயின் தமிழ் மக்கள் இங்கு வாழலாம் என்று கூறியவர் சரத் பொன்சேகா.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று இராணுவத்தளபதியாக இருந்த ஒருவர் கூறியிருப்பாராயின் அவர் இராணுவத்தளபதியாக இருந்த போது எத்துணை இனவாதத்துடன் செயற்பட்டு இருப்பார் என்பதை அளவிடுவதற்கு வேறு ஆதாரங்கள் தேவைப்பட மாட்டாது.

எதுவாயினும் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சரத் பொன்சேகா, தமிழ்த் தாய்மார் விடும் கண்ணீருக்கு கணக்கு காட்டவேண்டியவர்களில் ஒருவர்.

அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை என்றார் வள்ளுவர்.

சீனாவிடம் இந்தியாவிடம் பிரிட்டனிடம் என எந்த நாட்டிடமும் நீங்கள் ஆயுதங்கள் வாங்கலாம். அதனைப் போருக்குப் பயன்படுத்தலாம், வெற்றியும் பெறலாம்.

ஜனாதிபதிக்கு முன்பாக நின்று வெற்றியின் செய்தியையும் அறிவிக்கலாம்.

ஆனால் தங்கள் பிள்ளைகளை இழந்து- பறிகொடுத்து விட்டு நாளும் பொழுதும் அழுது கண்ணீர் விட்டு கதறுகின்ற தாய்மார்களின் ஓலம் இந்த நாட்டை அழிக்கவல்ல மிகப்பெரிய ஆயுதம் என்பதை எவரும் மறக்கக் கூடாது.

அதிலும் குறிப்பாக சரத் பொன்சேகா இதனை மறந்து விடலாகாது.

ஏனெனில் போர் வெற்றிக்குப் பின்னர் அவர் சிறையில் இருந்து வரிசையில் நின்று தட்டேந்தி உணவு பெற்றதை ஒரு காலமும் மறக்க மாட்டார் என்பதால்,

செய்ததை- அதற்குக் கிடைத்ததை நினைப்பதும், கிடைத்த பட்டம் பறிக்கப்பட்டதை ஞாபகம் செய்வதிலும் சரத் பொன்சேகாவிற்கு அதிக கஷ்டம் இருக்கமாட்டாது என்பதால், அவர் தமிழ் மக்களுக்கு செய்ததை மறக்காமல் பிராயச்சித்தம் செய்தாகவேண்டும்.

# எனது மகன் குடித்திருப்பாரெனின் அமைச்சு பதவியிலிருந்து விலகத் தயார்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

தனது மகன் ரம்மித் ரம்புக்வெல விமானத்தில் குடித்துவிட்டு குழப்பம் செய்தது உறுதிப்படுத்தப்பட்டால் தனது பதவிகளிலிருந்து விலகத் தயாராக இருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அத்தோடு தனது மகன் அதிகமாகக் குடித்திருக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளில் இடம் பெற்ற ஏ கிரிக்கெட் தொடரை முடித்துக் கொண்டு பிரிட்டிஷ் எயார்வேய்ஸ் விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது கழிவறையின் கதவு என எண்ணிக் கொண்டு ரம்மித் ரம்புக்வெல விமானத்தின் கதவைத் திறக்க முனைந்தார் எனவும் அச்சம்பவத்தில் அவர் குடித்திருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரச ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அரச ஊடகப்பேச்சாளராகக் கலந்து கொண்ட கெஹலிய ரம்புக்வெல தனது மகன் குடித்திருந்ததாகவும் விமானத்தில் குழப்பம் விளைவித்ததாகவும் வெளியாகும் செய்திகள் உறுதிப்படுத்தப்பட்டால் தனது பதவிகளிலிருந்து உடனடியாக விலகத் தயாராகவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறித்த விமானத்திற்குள் செல்லும் முன்னர் தனது மகன் ஒரு கோப்பை றெட்வைன் மாத்திரமே அருந்தியிருந்ததாகக் குறிப்பிட்ட அவர், லண்டன் ஊடகங்களில் தனது மகன் அதிக நேரமாக மது அருந்தினார் என்று வெளியாகிய செய்திகளை மறுத்தார்.

தன்னையறியாமல் செய்த தவறுக்காக தனது மகன் விமானப் பணியாளர்களிடம் ஏற்கெனவே மன்னிப்புக் கோரியதாகத் தெரிவித்த அவர் தனது மகனின் மன்னிப்பை குறித்த விமான சேவை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-2)

## குடும்ப வன்முறையை தூண்டிய மாமியாருக்கு எச்சரிக்கை

(கரவெட்டி)

குடும்ப வன்முறைக்கு ஊக்கமளித்த மாமியாருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் கடும் எச்சரிக்கை விடுத்து விடுவித்தது.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் குடும்ப வன்முறையில் ஈடுபட்டு வந்த குடும்பஸ்தர் ஒருவர் தனது தாயாரின் கதையைக்கேட்டு மனைவியைத் துன்புறுத்தி வந்துள்ளார்.

அத்துடன் இவ்வழக்கில் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் மனைவியுடன் 6 மாத காலத்திற்குள் எது விதமான துன்புறுத்தல்களையும் மேற் கொள்ளாது பிரிந்து வாழவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றபதில் நீதவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் ஆஜரான கணவன்- மனைவி தாம் சேர்ந்து வாழ சம்மதம் தெரிவித்தனர்.

மனைவி, தனது மாமியார்தான் குடும்பத்தில் வன்முறைகளை தூண்டிவிடுவதாக நீதவான் முன்னிலையில் தெரிவித்தார்.

குறித்த மாமியாரை மன்றில் அழைத்து கடுமையாக எச்சரித்ததுடன் பதில் நீதவான் மாமியாரை விடுவித்தார்.

அத்துடன் இவ்வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ-ம-24)

## ஆண்டு நிறைவும் பொதுக் கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

கைதடி நவீல்ட் பாடசாலையின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொள்ளவுள்ளார். (அ)

## கல்வி அதிகாரிகள் மூவருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த மூன்று உத்தியோகத்தர்கள் உடன் செயற்படும் வண்ணம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்திய சீலன் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ். மாணிக்கராசா யாழ். கல்வி வலயத்திற்கு பிரதிக்கல்விப் பணிப்பாளராகவும் (கல்வி அபிவிருத்தி )கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வி.பாலசுப்பிரமணியம் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் (நிர்வாகம்) யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.சற்குணராசா கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். (எ-11)

## தொலைபேசிமூலம் உயிர் அச்சுறுத்தல்

ஆகோள் ஆய்வு மையத்தின் ஆய்வாளர் ஜெகநாதன் அரங்கராஜினை இனம் தெரியாத நபர் ஒருவர் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றதாகவும் இதுதவிர ஆகோள் ஆய்வு மையத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் பெயர்ப்பலகையும் காணாமற் போயுள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (அ-6)

## தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டி

இவ்வாண்டுக்கான அகில இலங்கை ரீதியான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இப்போட்டிகளில் மாகாணமட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-23)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### முன்னேறு மேலே மேலே!



❁ மனதிற்குள் புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப் படுத்துவதுதான் கல்வி. வெறும் புள்ளி விபரங்களை சேகரிப்பது கல்வியல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதே அதன் அடிப்படை இலட்சியம்.

❁ ஒவ்வொரு மனிதனும் கட்டளையிடவே விரும்புகிறான். கீழ்ப்படிவதற்கு யாரும் தயாராக இல்லை. முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக வந்து சேரும்.

❁ சிரத்தையோடு செயற்படுவதுதான் இப்போது நமக்கு அவசியமான ஒன்று. மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்திக் காட்டுவது இந்தச் சிரத்தை மட்டுமே.

❁ மனவலிமையுடன் சிரத்தை கொண்டவர்களாக மாறுங்கள். கேலி பேசுவது. புறம் பேசுவது. வீண்பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செலுத்துவதை அறவே கைவிடுங்கள்.

❁ சீர்திருத்தம் என்ற வார்த்தையைச் சொல்லத்தேவையில்லை. மாறாக முன்னேறிச் செல் என்று சொல்லுங்கள். சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு முன்னேறுங்கள்.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



சிறு குழந்தைகளில் பலர் புற்றுநோய், மூளைக்கட்டி போன்ற நோய்களினால் இறக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன?

இவ்வாறு நிகழ்வதற்கு அடிப்படைக்காரணம் மனிதனின் முரட்டுச்சுபாவமும் பூமித்தாய்க்கு நாம் செய்யும் செயல்களும்தான். உதாரணத்திற்கு யூகலிப்டஸ் மரத்தை எடுத்துக்கொள்ளுங்கள். மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கும்போது பெரிய இயந்திரங்களால் அதை அழித்து விடுகிறீர்கள். பின்பு இந்தக் கோழிப் பண்ணைகள், மாட்டுப்பண்ணைகளில் பிராணிகளைக் கொடுமைப்படுத்துகிறீர் கள். அவைகள் முழுமையான வாழ்க்கையை வாழவிடாது தடுத்து விடுகிறீர்கள். அவைகளுடைய வாழ்நாட்களை முடித்துவிடுகிறீர்கள். ஆடு, செம்மறியாடு, கோழி போன்ற பிராணிகளைக் கசாப்புக் கடைக்கு எடுத்துச்சென்று கொன்று விடுகிறீர்கள். வாழ்க்கை என்னும் இந்த வலையில் ஜீவராசிகளுக்கும் ஒரு பங்கு உண்டு. சுற்றுப்புறச் சூழ்நிலையைக் காப்பாற்றவேண்டியது மனிதனின் கடமை. ஆனால் அதற்கு நேர்மாறாகச் செய்து கொண்டிருக்கிறான்.பூமி, பிராணிகள், தாவரங்கள் மற்றும் அனைத்து ஜீவராசிகளையும் காப்பாற்றவேண்டிய பங்கு மனிதனுக்கு உள்ளது. ஆனால் அவன் அதைச் செய்வதே கிடையாது. மாறாக அவைகளை எல்லாம் உண்ணத் தொடங்கி விட்டான். அவைகள் எல்லாம் அவனுக்காகவே உள்ளது என்று அவன் நினைக்கிறான். இவை அனைத்தும்தான் இன்று நீங்கள் பார்க்கும் புற்றுநோயாகவோ, குழந்தைகளின் மூளைக்கட்டியாகவோ அல்லது சில கொடூரச் செயல்களாகவோ உங்களுக்கே திரும்பவருகின்றன. மனித இனம் மாறாவிட்டால் இது போன்றவைகள் மேலும் நிறைய நடப்பதற்கு வாய்ப்புள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்து தரவரிசையில் பிரேசில் திடீர் பாய்ச்சல்

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (ஃபிஃபா) வெளியிட்டுள்ள தரவரிசையில் பிரேசில் அணி 12 இடங்கள் முன்னேறி, 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

பிரேசிலில் நடைபெற்ற கான்ஃபெடரேஷன் கிண்ண போட்டியில் சம்பியன் பட்டம் வென்றதன் மூலம அதிரடி முன்னேற்றம் கண்டுள்ளது பிரேசில். கான்ஃபெடரேஷன் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக பிரேசில் அணி 22ஆவது இடத்தில் இருந்தது.

எனினும் பிரேசில் அணி தற்போதைய 9ஆவது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள கடுமையாகப் போராட வேண்டியிருக்கும்.

ஏனெனில் அடுத்த ஆண்டு ஜூன மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னதாக அந்த அணிக்கு எந்த சர்வதேசப் போட்டியும் இல்லை. அதேநேரத்தில் தரவரிசையில் முன்னணியில் உள்ள ஏனைய அணிகள், உலகக் கிண்ண தகுதிச்சுற்றில் குறைந்த பட்சம் 4 ஆட்டங்களில் விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஸ்பெயின் முதலிடம்:**

கான்ஃபெடரேஷன் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தில் பிரேசிலிடம் தோற்றபோதும், தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது ஸ்பெயின்.

ஜேர்மனி 2ஆவது இடத்திலும், கொலம்பியா அணி 4 இடங்கள் முன்னேற்றம் கண்டு 3ஆவது இடத திலும் உள்ளன.

கொலம்பியா அணிக்கு இது சிறந்த தரவரிசையாகும். ஆர்ஜெனடீனா, நெதர்லாந்து அணிகள் முறையே 4 மற்றும் 5ஆவது இடங்களைப் பிடித்துள்ளன.

கான்ஃபெடரேஷன் கிண்ணத்தில் 3ஆவது இடம்பிடித்த இத்தாலி அணி 6ஆவது இடத்தில் உள்ளது. போர்ச்சுக்கல் 7ஆவது இடத்திலும், குரேஷியா 8ஆவது இடத்திலும் உள்ளன.

**இங்கிலாந்து பின்னடைவு:**

பெல்ஜியம் அணி, முதல்முறையாக 10ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. உருகுவே அணி 7 இடங்கள் முன்னேற்றம் கண்டு தற்போது 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

அதேநேரத்தில் முதல் 10 இடங்களுக்குள் இருந்த இங்கிலாந்து அணி, தற்போது அதை இழந்துள்ளது. 6 இடங்களை இழந்துள்ள இங்கிலாந்து, 15ஆவது இடத்தில் உள்ளது.

ஜப்பான் அணி 37ஆவது இடத்தில் உள்ளது. இதன்மூலம் ஆசிய அணிகள் வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்திய அணி 146ஆவது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆஸி-இந்தியா சுற்றுப்போட்டிகள்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஒரு 20 ஓவர் சர்வதேச போட்டி மற்றும் 7 ஒரு நாள் போட்டிகளில் விளையாட உள்ளது. இதற்கான போட்டி அட்டவணையை இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இதில் புனேயில் அமைந்துள்ள சுப்ரதா ராய் சகாரா விளையாட்டரங்கில் முதல் ஒரு நாள் போட்டி நடைபெறும். இங்கு சர்வதேச ஒரு நாள் போட்டி நடக்க இருப்பது இதுவே முதல் முறையாகும். அனைத்து ஒரு நாள் போட்டிகளும் பகல்-இரவாக (பிற்பகல் 2.30 மணி முதல்) நடத்தப்படுகிறது.

**ஆட்ட விபரம்:**

| | |
|---|---|
| ஒக்.10 | 20 ஓவர் போட்டி, ராஜ்கோட் |
| ஒக்.13 | முதலாவது ஒரு நாள் போட்டி, புனே |
| ஒக்.16 | 2ஆவது ஒரு நாள் போட்டி, ஜெய்ப்பூர் |
| ஒக்.19 | 3ஆவது ஒரு நாள் போட்டி, மொகாலி |
| ஒக்.23 | 4ஆவது ஒரு நாள் போட்டி, ராஞ்சி |
| ஒக்.26 | 5ஆவது ஒரு நாள் போட்டி, கட்டாக் |
| ஒக்.30 | 6ஆவது ஒரு நாள் போட்டி, நாக்பூர் |
| நவ.2 | 7ஆவது ஒரு நாள் போட்டி, பெங்களூர் |

# பாக்.மசாஜ் நிபுணர் பதவி நீக்கம்

பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியின் மசாஜ் நிபுணர் பாலியல் குற்றச்சாட்டின் பேரில் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பியன்ஸ் கிண்ணத்திற்காக பாகிஸ்தான் அணி இங்கிலாந்திற்குச் சென்றிருந்த வேளையில், லண்டனில் தங்கியிருந்த ஹோட்டல் ஒன்றிலேயே பாகிஸ்தானின் மசாஜ் நிபுணர் இந்தக் குற்றத்தில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த ஹோட்டலில் பாகிஸ்தான் அணி தங்கியிருந்தபோது, மலாங் அலி என்ற குறித்த மசாஜ் நிபுணர், அந்த ஹோட்டலில் பெண் ஊழியர் ஒருவரை பாலியல் ரீதியாக தொல்லை செய்ததாகவும், அதன் காரணமாக அவ்விடயம் தொடர்பாக அந்தப் பெண் அதுகுறித்து முறைப்பாடு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் அது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நிர்வாகம் அது குறித்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும், அதில் அவர் குற்றம் செய்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக அவர் உடனடியாக இங்கிலாந்தை விட்டுத் திருப்பி அனுப்பப்பட்ட தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் பாகிஸ்தானுக்குத் திரும்பியதும் அவர் மீது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விசாரணை மேற்கொண்டதாகவும், அதன் பின்னர் அவர் இந்தப் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# ஒகஸ்ட்டில்....

ஒகஸ்ட் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் ருவென்ரி ருவென்ரி தொடரில் பங்குபற்றுவதற்காக 90 வெளிநாட்டு வீரர்கள் தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின பணிப்பாளர் அஜித் ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், அவுஸ்திரேலிய, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீரர்களே இவ்வாறு இவ்வருடத்திற்கான தொடரில் பங்குபற்றுவதற்கு தங்கள் விருப்பத்தை வெளியிட்டுள்ளதாகத் தெரிவித்த அஜித் ஜெய சேகர, இவ்வருடத்திற்கான தொடர் பரந்துபட்ட ரசிகர்களை இலககாகக் கொண்டு செயற்படும் எனத் தெரிவித்துள்ளார்.


இவ்வருடத்திற்கான தொடர் இலங்கை முழுவதிலுமுள்ள 7 மைதானங்களில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த அஜித் ஜெயசேகர, ஆர்.பிரேமதாச மைதானம், ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம், தம்புள்ள மைதானம் ஆகியவற்றில் போட்டிகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த வருடம் முதன்முறையாக இடம்பெற்ற ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் ஆர்.பிரேமதாச மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் மாத்திரம் இடம்பெற்றிருந்ததோடு, அப்போட்டிகளில் பார்வையாளர்கள் வரவு குறைவாகக் காணப்பட்டிருந்தது.

இவ்வருடத்திற்கான போட்டிகள் ஒகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதுடன், அப்போட்டிகளுக்கான அணிகளைத் தெரிவதற்கான தெரிவு எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை அணிக்கு எதிராக மெதுவாகப் பந்துவீசிய குற்றச்சாட்டு:

# கோலிக்கு அபராதம்



இந்திய அணியின் தலைவர் விராத் கோலிக்கு அவரது போட்டி ஊதியத்தின் 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. இந்திய அணி மெதுவாகப் பந்துவீசியதன் காரணமாகவே இந்த அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

இந்திய அணியின் வழக்கமான தலைவர் மகேந்திரசிங் தோனி உபாதைக்குள்ளாகியுள்ளதன் காரணமாக, இந்திய அணியின் தலை வராகச் செயற்பட்ட விராத் கோலிக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கெதிராக ஜமைக்காவில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி விதிக்கப்பட்ட நேரத்துக்குள் ஓர் ஓவர் குறைவாக வீசியிருந்ததன் காரணமாக அவ்வணியின் வீரர்களுக்கு அவர்களது போட்டி ஊதியத்தின் 10 சதவீதமும், அணியின் தலைவரான விராத் கோலிக்கு அவரது போட்டி ஊதியத்தின் 20 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

# விம்பிள்டன் இறுதி ஆட்டத்தில் லிசிக்கி – பார்ட்டொல்லி மோதல்

லண்டனில் இடம்பெற்றுவரும் விம்பிள்டன் டெனிஸ் தொடரின் பெண்களுக்கான அரையிறுதி ஆட்டங்களில் ஜேர்மனியின் சபீன் லிசிக்கி, பிரான்ஸின் மரியன் பார்ட்டொல்லி ஆகியோர் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

4ஆம் நிலை வீராங்கனையான போலந்தின் அக்னிஸ்கா றட்வன்ஸ்காவிற்கும், 23ஆம் நிலை வீராங்கனையான ஜேர்மனியின் சபீன் லிசிஸ்கிக்குமிடையில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் சபீன் லிசிக்கி வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார்.


முதலாவது செற்றை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றிய சபீன் லிசிக்கி, இரண்டாவது செற்றை 2-6 என்ற கணக்கில் இழந்த போதிலும், மூன்றாவது செற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் 9-7 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் 15ஆம் நிலை வீராங்கனையான பிரான்ஸின் மரியன் பார்ட்டொல்லியும், 20ஆம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கேர்ஸ்ரன் ஃபிளிப்ஹன்ஸும் மோதினர்.

இப்போட்டியில் மரியன் பார்ட்டொல்லி 6-1, 6-2 என்ற கணக்கில் மிக இலகுவாக வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தின் அரையிறுதிப் போட்டிகளில் ஐக்கிய அமெரிக்காவின் பொப் பிரையன் சகோதரர்கள், இந்தியாவின் றொகான் போபபன்னா - பிரான்ஸின் எடுவோர்ட் றொஜர் வசெலின் ஜோடியை 6-7, 6-4, 6-3, 5-7, 6-3 என்ற கணக்கில் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

இரண்டாவது அரையிறுதியில் குரோசியாவின் இவன் டொடிக் - ஜமைக்காவின் மார்செலோ மெலோ ஜோடி, இந்தியாவின் லியாண்டர் பயஸ் - செக் குடியரசின் றடெக் ஸ்ரெபனெக் ஜோடியை 3-6, 6-4, 6-1, 3-6, 6-3 என்ற கணக்கில் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



விம்பிள்டன் டெனிஸ் போட்டியின் அரையிறுதியில் வெற்றிபெற்று இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்ற ஜேர்மனியின் சபீன் லிசிக்கி வெற்றிக் களிப்பில் ஆடுகளத்தில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கான நேர்முகத் தேர்வு இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து அறிவித்ததன் பிரகாரம் பட்டதாரிகளின் ஆவணங்கள் பரிசீலிக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் யாழ்.செயலகத்தினரால் உரிவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்திற்கு உயர் தொழில்நுட்ப நிறுவன பட்டதாரிகள் அழைக்கப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நேர்முகத் தேர்வுக்கு இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.செயலகத்துக்கு வருகை தருமாறு கூறப்பட்டது.

இதேவேளை, இன்று கொழும்பில் நடைபெறவுள்ள பரீட்சை ஒன்றில் தோற்றுவ தற்காக அதிகளவான பட்டதாரிகள் கொழும்பு சென்றுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-11)

## பஸ்கள் விபத்து...

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும் வவுனியாவிலிருந்து பயணிகளுடன் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான அரச பேருந் தும் இவ்வாறு யாழ்ப்பாணம் புங்கன்குளம் சந்தியில் நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளானது.

இதில் யாழ்.மருதங்கேணியைச் சேர்ந்த பி.சுஜித்தா(வயது-38), மீசாலை வடக்கைச் சேர்ந்த கே.சந்திராதேவி(வயது-61) ,சில்லாலை தெற்கைச் சேர்ந்த இ.அல்பேட்(வயது-53) கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த பி.தர்மலோஜினி(வயது-40), வெற்றிலைக்கேணிதாழையடியைச் சேர்ந்த ஆர்.தேவராணி(வயது-37), யாழ்பாணம் அரசடியைச் சேர்ந்த ரி.பரமேஸ்வரி (வயது-50),உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த எஸ்.தேவராணிப்பிள்ளை (வயது-69) நெல்லியடியைச் சேரந்த ஜி.சுகந்தினி(வயது-31)ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(எ-6)

## மயிலிட்டிக்கு சென்ற...

வழங்கினர்.

இதனால் வழிபாட்டுக்குச் சென்ற மக்கள் திரும்பிச் சென்றனர். போர் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு அகதிகளாக கடந்த 1990-ம் ஆண்டு வெளியேறிய மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் சுமார் 24 வருடங்களின் பின்பு ஆலய வழிபாட்டுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் விடியற்காலை பொழுதினிலேயே விஷேட பஸ்களில் மாவட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு முன்பாகச் சென்று இராணுவத்தினரின் அனுமதிக்காக மக்கள் காத்திருந்தனர்.

கைக்குழந்தைகளுடன் சிறுவர், சிறுமிகளுடனும் ஆலய வழிபாட்டுக்காக கலாசார ரீதியாக உடை அணிந்து பெருமளவான பெண்களும் ஆண்களும் வயோதிபர்களும் [illegible]த்திருந்த நிலையில்,

இராணுவத்தினரின்கட்டளையை தாங்கியவாறு பொண்ணொருவர் மக்களை நோக்கியவாறு வந்து 200 பேரை மட்டும்தான் இராணுவம் உள்ளே செல்ல அனுமதி வழங்குமாம். ஏனையவர்கள் உள்ளே செல்ல முடியாது எனக் கூறியதோடு பாதுகாப்புப் பிரச்சினை உள்ளதால் இராணுவத்தினர் இவ்வாறு கூறினார்கள் எனவும் தெரிவித்தார்.

இதனையடுத்து அங்கு கூடியிருந்த மக்களுக்கு குறித்த பெண்ணுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

அத்துடன் 200 பேரை உள்ளே செல்ல அனுமதித்தால் ஏனையவர்கள் என்ன செய்வது? விட்டால் முழுமையாக அனைவரையும் விடட்டும். இல்லாவிட்டால் அனைவரும் திரும்பிச் செல்வோம் என உரத்த குரலில் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதோடு ஒருவருக்கு ஒருவர் கருத்து முரண்பாட்டிலும் ஈடுபட்டனர்.

இவ்வாறு முற்பகல் 9.50 மணிவரை அங்கு கூடியிருந்த மக்கள் ஏற்பாட்டாளர்களுடன் கருத்து முரண்பாட்டில் ஈடுபட்டதோடு வீட்டுக்குத் திரும்பிச் செல்லவும் ஆயத்தமானார்கள்.

தமது வீட்டுக்கு பொது மக்கள் திரும்பிச் செல்வதை ஏற்பாட்டாளர்கள் தடுக்க முற்பட்ட போதும் அது பலனளிக்கவில்லை. ஒவ்வொரு வரும் தாங்கள் வந்த பேருந்துகளில் ஏறிச் சென்று கொண்டிருந்தனர்.

24 வருடங்களின் பின்பு தமது சொந்த இடங்களுக்குச் சென்று ஆலய வழிபாட்டில் ஈடுபடும்நோக்கத்தோடு வந்த மயிலிட்டி மக்களுக்கு இறுதியில் ஏமாற்றமாகவே அமைந்திருந்தது.

ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதற்கான அனுமதியை ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சும் வழங்கியுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்திருந்த நிலையில் மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் நேற்று அங்கு சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## எதிர்பார்த்த எந்த விடய...

நடத்துவதற்கும், சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றனர்.இந்த நடவடிக்கை முற்றிலும் தவறானது.

அரசியல்வாதிகள் காலம் காலமாக தமது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கான குறிக்கோளில் இருக்கின்றார்களே தவிர மக்களின் தேவைகளை நிறைவேற்றி கொள்வதில் பங்களிப்பு செய்யவதில்லை.

இந்த நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் மக்கள் பல்வேறு வழிகளில் தமது பழைய வாழ்க்கைக்கு திரும்ப முயற்சிக்கின்றார்கள். ஆனால், இந்த அரசு அவர்களுக்கு பலவழிகளிலும் துன்பத்தை ஏற்படுத்தி வருகின்றது.

அதுமட்டுமல்லாமல், இன்றைய காலகட்டத்தில் ஆட்சியிலுள்ள அரசியல்வாதிகளில் 95 வீதமானவர்கள் ஊழல் நிறைந்த அரசியல் தலைவர்களாக இருக்கின்றார்கள். அதேவேளை, அரசாங்கத்தின் பணத்தினை வீண் விரையம் செய்கின்றனர்.

நான் வடக்கு மக்களின் பிரச்சினையை நன்கு உணர்ந்துள்ளேன். அனைத்து மக்களின் பிரசசினைகளை தீர்த்து அனைத்து மக்களையும், ஒற்றுமையுடன் சம உரிமையுடன் நடத்த வேண்டும்

அதேவேளை, இலங்கை முழுவதிலும் உள்ள அனைத்து மக்களும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும். ஆனால், மக்களுக்கு தேவையானவற்றினை எவ்வாறு முன்வைப்பது என்பது பற்றி அரசாங்கத்திற்கு தெரியவில்லை என்றும் அத்துடன், இந்தியாவுடன் ஒற்றுமையாக இருக்கவும் இலங்கை அரசுக்குத் தெரியவில்லை என்றும் மக்களை பிழையான வழியில் கொண்டு செல்கின்றார்கள் எனவும் குற்றம்சாட்டினார். அதேவேளை 13ஆவது திருத்தினை மாற்றுவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்றும் தெரிவித்தார்.

அத்தோடு மக்களின் தேவைகளை இந்த அரசாங்கம வெளி உலகிற்குச் சரிவர தெரியப் படுத்தவில்லை. இதனை மக்களுக்கும் வெளியுலகிற்கும் தெரியப்படுத்த வேண்டும். இதுவே தனது நோக்கம் எனவும் தெரிவித்தார்..

மேலும் இலங்கையில் தற்போது பொருளாதாரம் சரிவடைந்து செல்கின்றது. இந்நிலையினை மாற்றி மக்களுக்கு சேவை மனப்பாங்குடனும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்ய வேண்டும். சாதாரண மக்களின் அன்றாட தேவை களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது.

தெற்கில் மாகாணசபை இயங்குகின்ற போது, வடக்கில் மட்டும் மாகாண சபை இயக்குவதையும், மக்களின் உரிமைகளை கொடுப்பது பற்றியும் யோசிக்க வேண்டிய தேவையில்லை என்றும் தெரிவித்ததோடு வடக்கு, தெற்கு என்ற பேதமின்றி சுய பாதுகாப்பு, அமைதி, சுய உரிமை ஒரே நாடு, ஒரே தேசம் என்ற நோக்கத்தினையுடைய புதிய அடிப்படையிலான அரசியலமைப்பினை உருவாக்க வேண்டும் எனவும் அதுவே தனது நோக்கம் என்றும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(எ-6,4)

## 7 வருடங்களின் பின்...

பட்டுள்ள காந்திசிலை அருகே இந்த 5 மாணவர்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இம்மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்றும், தமக்கு நீதி கிடைக்கவில்லை என்றும் இச்சம்பவத்தின்போது படுகொலை செய்யப்பட்ட ரஜீகரின் தந்தை டாக்டர் மனோகரன் இவ்வாண்டு ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் இடம்பெற்ற மீளாய்வு மாநாட்டில் கவலை தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இப்படுகொலைகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன்னிறுத்தப்பட வேண்டும் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்துள்ளன.

இப்படுகொலைகள் உள்ளிட்ட இன்னும் பல மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஆணைக் குழு, விசாரணை முழுமை பெறாமலேயே 2009ஆம் ஆண்டில் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டிருந்தது.

இந்நிலையில் சட்டத்துக்குப் புறம்பான முறையில் இடம்பெற்ற இப்படுகொலைகளை அரசாங்கம் மூடி மறைத்து வந்த போதிலும், சர்வதேச ரீதியில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களால் தற்போது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

## வடக்குத் தேர்தலை நடத்த...

வடக்கு மாகாண சபை உள்ளிட்ட வடமேல் மாகாண சபை மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதற்கு வசதியாக நேற்று நள்ளி ரவுடன் வடமேல் மாகாண சபை மற்றும் மத்திய மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளன.

இது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், எதிர்வரும் சில தினங்களில் வட மாகாண சபைத் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவிப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1987-ம் ஆண்டு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின்படி, வடக்கு -கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் கடைசியாக 1988-ம் ஆண்டு நடத்தப்பட்டது.

அதன் பின்னர் தேர்தல்கள் நடத்தப்படாமல் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர்களினால் மாகாண சபை நிர்வாகம் நடத்தப்பட்டுவந்தது.

2006-ம் ஆண்டில் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த மக்கள் விடுதலை முன்னணி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத தொடர்ந்ததன்படி வடக்கு -கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன.

அதன்பின்னர், கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது தவணை ஆட்சிக் காலம் இப்போது நடக்கிறது.

உள்நாட்டு போர் 2009-ம் ஆண்டில் முடிவுக்கு வந்த நிலையில், வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் 2013-ம் ஆண்டு செப்ரெம்பரில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஆண்டு கூறியிருந்தார்.

ஆனாலும் தேர்தல் சொன்னபடி நடக்குமா என்பது கேள்விக்குறியே என்று பல தரப்பிலும் சந்தேகங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

வடக்குத் தேர்தல் தொடர்பில் தனக்கு அதிகாரபூரவமாக அறிவித்தல் வரவில்லை என்று தேர்தல்கள் ஆணையாளரும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆளும் சுதந்திரக் கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகளை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


# துயர் பகிர்கின்றோம்

அமரர்

## க. மெய்யழகன்

மண்ணில் 10-04-1956 விண்ணில் 05-07-2013



எமது சமாசத்தின்முன்னாள் தலைவரும்,
பணிப்பாளர் சபை உறுப்பினருமான
திரு. க. மெய்யழகன்
அவர்களின் மறைவுச் செய்தி எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது.
ஓர் உண்மைக் கூட்டுறவாளரை,
தலைமைத்துவப் பண்புகள் அனைத்தையும்
தன்னகத்தே கொண்ட ஒரு நல்ல
தலைவரை எமது கூட்டுறவுச்சமூகம்
இழந்து தவிக்கின்றது. இவர் சுன்னாகம்
ப.தெ.வ.அ.கூ.சங்கத் தலைவராகவும், யாழ்
மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர்
சபை உறுப்பினராகவும், கிராமிய வங்கிகளின்
சமாசத்தின் முன்னாள் பணிப்பாளர்
சபை உறுப்பினராகவும், தேசிய கூட்டுறவுச்
சபையின் பொதுச் சபை உறுப்பினராகவும்,
வலிகாமம் கொத்தணியின் முன்னாள்
தலைவராகவும் இருந்து தனது தனித்துவமான
ஆற்றல்களால் கூட்டுறவை வளர்த்தெடுத்த
பெருமைக்குரியவராவார்.
அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச. சமாசம்,
52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 5072

(C-3903)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பரில் யாழ்தேவி வரும்!

யாழ்தேவி ரயிலின் வடக்கு பயணத்தை விரைவில் ஆரம்பித்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்தேவி ரயிலை கிளிநொச்சி வரை பயணிக்க வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதென போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இது தொடர்பில் வடக்கு ரயில் வீதி புனரமைப்பு நிறுவனாங்களின் பிரதிநிதிகள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் அதிகாரிகளுக்கு இடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அதன்போது 2 மாதங்களில் யாழ்தேவி ரயிலை கிளிநொச்சி வரை பயணிக்க வைப்பதென்றும் அடுத்த வருட முடிவுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு பயணிக்க வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-11)


## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய பிரிவுகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.

* French, Italian , English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

Tel: 0213216928, 0774842464 (Gov. Reg.No: W/A 76795) (சி-3883)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA


French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.

**புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093**

61, Kachchery-Nallur Road, Jaffna.

(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (3159)


# நேபாள முன்னாள் பிரதமர் இன்று யாழில் உரை



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் ஆண்டுவிழாவின் சிறப்புரையை நேபாள முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான தோழர் மாதேவ் குமார் நேபாள் வழங்கவுள்ளார்.

அத்துடன் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர மற்றும் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவும கலந்துகொள்ளவுள்ளனர். (செ)


## தவறவிடப்பட்டபொருள் பற்றிய அறிவித்தல்

LI 3941 இலக்க ரிப்பர் வாகனத்தின் பச்சை நிற சிட்டைகள் அடங்கிய மஞ்சள் நிறபைல் [Clear Bag] இராமநாதபுரத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொலைபேசி இலக்கம்

**0773678650, 0772041120** (C-3905)

## உடனடி வேலைவாய்ப்பு

(20 பேர் மட்டும் தேவை)

தொடர்புகளுக்கு : 0778602777, 0775566224, 0770771377

முழுநேர வேலைவாய்ப்புக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு துடிப்பும் ஆர்வமும் உள்ள இளைஞர், யுவதிகள், தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமை இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

- MARKETING / SALES
- WARE HOUSE / DISTRIBUTION
- MANAGEMENT TRAINEE

குறிப்பு : பயிற்சிக்காலத்தில் 750/- to 1500 /-Perday பெறமுடியும். சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம்.

வயதெல்லை : 18 - 35 வரை அனுபவம் அவசியம் **இல்லை**

No. 70, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (C-3846)

## 'முட்டாள்' ஆக வெளிநாடு போகப்போகிறீர்களா?

| மேசனின் ஒரு நாள் கூலி | முட்டாளின் சம்பளம் |
|---|---|
| **1500/-** | **700/-** |

மேசனுக்கு இருக்கும் தொழில் திறனும் அனுபவமுமே அவர் அதிகம் சம்பாதிக்கக் காரணம்

நீங்களும் வெளிநாடு போய் குறைந்தளவு ஊதியம் பெறாமல் 50,000/- வருமானத்துடன் தொழிற்பயிற்சியைப் பெற்று மாதம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் உழையுங்கள்

மொத்தச் செலவு

**465,000/- (நாலு இலட்சத்து அறுபத்தையாயிரம்)**

(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

| | |
|---|---|
| 3 மாத இலவச ஆங்கில வகுப்பு & துறைசார் அடிப்படைப் பயிற்சிகள் | விசேட கடன் வசதிகள் & பகுதி பகுதியாகக் கட்டணம் செலுத்தும் வசதி |
| சொகுசுமாடிக் குடியிருப்பில் இலவச தங்குமிடம் | IELTS வங்கிப்பணம் தேவையில்லை - நேரில் விசா அனுமதி |
| SEGi பல்கலைக்கழகத்தில் பயிற்சி | UK, Australia சான்றிதழ்கள் |
| வருமானத்தை உறுதிப்படுத்தும் தொழில் ஒப்பந்தம் (Job Contract) | பயிற்சி நிறைவடைந்து தொழில் பெறும் வரையில் தொடர் சேவை |

**பயிற்சி முடிவில் Australia, New Zealand, Canada, Singapore, Malaysia, China வில் Work Permit உடன் வேலைவாய்ப்பு**

வடக்கு மாகாண இளைஞர் யுவதியருக்கு இலவச கல்வி-தொழில் வழிகாட்டல் சேவையை வழங்கிவரும் எங்கள் அர்ப்பணிப்புமிக்க அரவணைப்பின்கீழ் வாருங்கள்...

**சிகரம்** கல்வி - தொழில் வழிகாட்டி

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)

தொ.பே.: 021 222 00 11

நேரடி: 0773 616 798

மி.அ.:edusikaram@gmail.com web:www.sikaram.lk (சி-3895)


# மரண அறிவித்தல்



## சின்னையா தவரெட்ணம் (JP)

(வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவர் , யாழ் மாவட்ட கூட்டுறவு சபை பணிப்பாளர், முன்னாள் தலைவர் யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவரெட்ணம் 03.07.2013 அன்று காலமானார்.

இவர் பிலோமினா (றோஸ்)வின் அன்புக் கணவரும், Dr. திருமாறன், றதிமதி, Dr. மதிமாறன் (I.O.M) அவர்களின் பாசமிகு தந்தையும் Dr. அனோமா, கனியூட், Dr. மகிழ்நங்கை (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யுனிஸ்ரன், ஹேமந்த, பிரசாதினி, பிராங்கோ, திருநயனி ஆகியோரின் பாசமிகு பேரனும், சீவரெட்ணம் (சிவம்) காலஞ்சென்ற அழகரட்ணம் மற்றும் சிவஞானரட்ணம் (ராசா), ஜெயரட்ணம் (கிளி) ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா (லில்லி), சேவியர், மற்றும் சின்னத்துரை (ஜேம்ஸ்) சின்னராசா (லக்ஸ்மாலா), புஸ்பராசா (ஜோசப்) சிவயோகம், மல்லிகாதேவி, மியூரியல், சிவஞானசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும். அலோசியஸ் அலெக்சாண்டர் (ஓய்வுபெற்ற அதிபர்) அல்வீனம்மா (ராணி), செல்வி அலோசியஸ் சகாயமேரி (பபி) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக எரிஞ்ச அம்மன் கோவிலடி (வியாபாரிமூலை - பருத்தித்துறை) மயிலிட்டிச் சங்க மண்டபத்தில் 08-07-2013 காலை 7.00 - 8.00 மணிவரையும், பின்னர் யாழ் பிரதான வீதியில் உள்ள யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தில் 11.00 - 11.30 மணி வரையும் அதன் பின்னர் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தில் 11.30-11.45 மணிவரையும் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கிருந்து மீண்டும் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும் அவரது பூதவுடல், அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 2.45 மணியளவில், நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு குருநகர் கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 3.30 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியின் பின், கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

83/11 கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 021 222 2563, 0773487167 (C-3894)

தகவல் : குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.